# முரசொலி


## அண்ணா மலர்-1976



விலை ரூ 1-50

# ஸோமானி-பில்கின்ஸ்டனின் சுவர் ஓடுகள் பதித்த உங்கள் கடை வாடிக்கைக்காரர்களை வருக! வருக! என்றழைக்கும்.





ஸோமானி-பில்கின்ஸ்டனின் எராஸ்மிக் சுவர் ஓடுகள் சிறப்பான வியாபாரத்திற்கு ஏற்ற நல்ல முதலீடு.

இவற்றின் சிக்கனமான அமைப்பு, உங்களை நிச்சயமாக வலியுறுத்தும். சுலபமாக கழுவமுடியும். நீடித்துழைக்கும்.. பராமரிக்கவும், மறுபடியும், மறுபடியும் செலவு செய்யவும் தேவையில்லை முற்றிலும் தட்ப- வெப்ப நிலைகளை தாங்கக் கூடியவை. உலகப் புகழ் பெற்ற பில்கின்ஸ்டன்ஸ் டைல்ஸ் லிட்.. இங்கிலாந்தின் துணை கொண்டு தயாரிக்கப்பட்டவை உயர்தரத்திற்கு உத்தரவாதம். பளிச்சிடும் வெண்மை உள்பட கவர்ச்சிகரமான டிசைன்களிலும் மங்காத நிறங்களிலும் கிடைக்கின்றன.

கையிருப்பு வைத்திருக்கும் ஹிந்துஸ்தான் ஸானிடரி வேர் ப்ரொடக்ட்ஸ் கடைகளிலிருந்து உங்கள் சக்திக்கு தக்கபடி சுலபமான விலையில் இவற்றை வாங்கலாம்.

**ஸோமானி-பில்கின்ஸ்டன்ஸ் லிமிடெட்**
2, ரெட்க்ராஸ் ப்ளேஸ், கல்கத்தா-700001

தம்பீ!

நாம் உண்மையான ஜனநாயகத்திலே பற்று மிகுதியாகக் கொண்டுள்ளதால்தான் அந்தக் கடமையைச் செய்வதிலே எத்தனை இன்னல் ஏற்படினும் பொறுத்துக் கொள்கிறோம்.

எத்தனை இழி மொழிகளை பழிச் சொற்களைத் தாங்கிக் கொள்கிறோம்.

பறந்துசெல்லும் காக்கை எச்சமிடுகிறது; பாதையிலே செல்பவனின் பட்டுச் சட்டை பாழ்படுகிறது.

அதனால் பயணம் நின்றுவிடுவதில்லை!

அறிஞர் அண்ணா







# வாழ்க நீ; தமிழ் வையகம் வாழ்ந்திடவே!



அண்ணனே,

அறுபத்தெட்டாவது பிறந்தநாள் விழா இன்று உனக்கு!

ஐம்பத்தி ஒன்பதாவது பிறந்தநாள் விழாவரையில் எங்களோடு இருந்து அன்பு மொழி பொழிந்து இன்பக் கடலில் எங்களைத் திளைக்க வைத்தாய்.

அதற்குப்பிறகு ஒன்பதாண்டுக் காலமாக உன் சிலைக்கு மாலையிட்டு, கண்ணீர்த் துளிகளால் உன் கால் மலரை அர்ச்சித்து உன் வழியில் ஓயாது உழைப்பதென்றும், உறுதி தளராது உழைப்பதென்றும், சூளுரைத்துக் கொண்டு தொடர்ந்து இலட்சியப் பயணத்தை நடத்தி வருகிறோம்.

எங்கள் பயணத்திற்கு உன் அணுகுமுறைதான் ஒளி காட்டும் விளக்காக இருக்கிறது.

எங்கள் வழியில் குறுக்கிடும் காட்டாறுகளைக் கூடக் கடந்து செல்ல நீ எங்களுக்கு அளித்துள்ள நெஞ்சுறுதி வலிமைமிக்க படகாகப் பயன்படுகிறது,

எங்கள் மீது வீசும் கணைகளைத் தடுக்கும் கவசமாக நீ வழங்கிய அறிவுரைகள் எங்களைப் பாதுகாக்கின்றன.

எங்கள்மீது கூறும் அவதூறுகளைத் தடுக்கும் கேடயமாக விளங்குகிறது. நீ எங்களுக்கு போதித்துள்ள அமைதியெனும் அருங்குணம்!

விழிநீரை அருவியெனப் பெருக்கெடுக்கச் செய்யும் வேதனைகள் எங்கள் வழியில் அடுக்கடுக்காக வந்தபோதெல்லாம்; ''உன்னைப் பிரிந்தபோது ஏற்பட்ட வேதனையைவிட இந்த வேதனைகள் என்ன அவ்வளவு பெரிதா?'' என மனத்தைத்தேற்றிக்கொண்டு நிலைகுலையாமல் எங்கள் நேர்வழிப் பயணத்தைத் தொடருகிறோம்.

'' மாறுதல் இயற்கை! தேவையுங்கூட!
அரும்பு மலரானல், மணமுண்டு அறிவோம்
ஆயினும் அய்யகோ-
அழகுடல் தன்னில் அரிப்புடன் வெறுப்பு
பரவிடல் நன்றோ?''

என தம்பிக்குஎழுதியமடலில் நீ கவிதையொன்று தீட்டிக் கேள்வி கேட்டாயே; அதனை மறவாமல் நீ தந்த கொள்கை அரும்பு இன்று மலராகி மணம் வீசும் கழகமெனும் தோட்டத்துக் காவலாளிகளாக நாங்கள் தொண்டாற்றுகிறோம்.

துரோகம் தலையெடுத்ததுண்டு; அதற்குத் துணை நின்றோரும் உண்டு.

துரோகத்தைச் சந்தித்துப் பழக்கப்பட்டது மட்டுமல்ல; அதனைத் தூளாக்கும் வித்தையையும் கற்றுகற்ற வித்தையை எங்களுக்குக் கற்பித்த ஆசானுமாயிற்றே நீ!

அந்தப் பயிற்சி வீண் போகாமல் பார்த்துக் கொண்டோம். தோட்டத்தில் முளைத்த துரோக விதைகளைத் தூக்கி எறிந்தோம். அதேசமயம் மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கு மணமுண்டு என்ற உனது மணிவாசகத்தை உதட்டின் அசைவுகளாக மாத்திரம் ஆக்கிக் கொள்ளாமல் உளமாரச் செயல்படுத்தியும் காட்டினோம்.

குடியேற்றம் நேர்தலில் காமராஜரை ஆதரித்தபோது அவரைக் குணாளர் - குலக்கொழுந்து எனக் கூறினாய்!

குமரி மாவட்டத்தேர்தலில் அவரைஎதிர்த்தபோது கூட அவரைத் ''தங்கக் காப்பு'' என்றுதான் சிறப்பித்துக் குறிப்பிட்டாய்.

எடுத்தேன்-கவிழ்த்தேன் என்றுபேச என்றைக்குமே உனக்குத் தெரியாது. எங்களையும் நீ அப்படிப் பழக்கிடவில்லை, அறவே அப்படியாருமில்லையா? என எவராவது கேட்பதற்கு முன்பே விளக்கமளித்து விடுகிறேன்' விதிவிலக்குகளாய்ச் சிலர் இருந்தனர். அவர்கள் உன் காலத்திலேயே வெளியேறிவிட்டனர். மிச்சமிருந்தவர்களையும் காலம், நன்றாக வடிகட்டிவிட்டது.


சென்றவர்கள் சிலர் சேறு வாரி வீசினர்—வீசிக்கொண்டேயிருக்கின்றனர், உன்னை எண்ணிக் கொள்கிறோம். எங்கள் மீது வீசப்பட்ட சேறு, சந்தனமாகிறது! அய்யோ – பாவம்! அவர்கள் கைகள் தான் சேற்றுப் புண்ணால் பாதிக்கப்பட்டுக் கிடக்கின்றன.

கழகத்தின் மீது களங்கம்சுமத்தக் களமே அமைத்துக் கொண்டனர். கதிரவனை முகிலால் மூடி விடலாம நிரந்தரமாக என முயன்றிடும்போது காற்று அலைகள் அதனை வேகமாக அப்புறப்படுத்திவிடுவதுபோல கழகத்தின் புகழ் அழிக்கப் புறப்பட்டவர்களை உன் கருத்து அலைகளைக் கொண்டே சமாளிக்கக் கற்றுக் கொண்டிருக்கிறோம் நாங்கள்!

நீடு துயில் நீக்கப் பாடிவந்த நிலவே! எங்கள் அண்ணனே! நீ எழுதிக் குவித்த அறிவுமணிக் கருத்துக்களை மறந்துவிடவில்லை நாங்கள்

'' தம்பி, தனிப்பட்டவர்களுக்குத் தனிப்பட்ட காரணங்களுக்காகக் கோப உணர்ச்சி கொதித்தால் அவர்களுக்கு உள்ள பலமும போய்விடும் மற்றவர்கள் கண்டு எள்ளி நகையாடவும் செய்வர். ஆனல் பொதுநல நோக்கத்துக்காக கொண்ட கொள்கைக்காக உணர்ச்சிப் பிழம்பாக மாறும்போது புதியதோர் வலிவு பெறுகிறோம், காண்போர்





# கலைஞர் கடிதம்

கனிவு காட்டுகின்றனர். ஜுர வேகத்தில் இருப்பவனை, நாலு பேர் சேர்ந்து அழுத்திப் பிடித்தாலும் நெம்பிக்கொண்டு எழுவான். அது வலிவின் அடையாளமல்ல, நோயின் தன்மை. கட்டான உடலை, உடற் பயிற்சி முறைகளால் மேலும் வலிவுள்ளதாகவும் பொலிவு மிக்கதாகவும் ஆக்கிக்கொண்டால் பத்துப்பேர் பிடித்திழுத்தாலும் நிலைகுலையாத தன்மை கிடைக்கும். அதுதான் உண்மையான வலிவுக்கு அடையாளம்.''

எக்காலத்துக்கும் பொருந்துகின்ற இந்த எழுத்தோவியத்தை உன் தம்பியர் அணி, இதயத்தில் தீட்டிக்கொண்டுப் பண்புடன் பணியாற்றுகிறதண்ணா!

எங்களுக்குக் கோபமூட்ட எவ்வளவோ முயற்சிகள் நடைபெறுகின்றன. எத்தனை விதமான எழுத்துக்கள்- எத்தனைவகையான ஏச்சுக்கள்- அத்தனையும் தாங்கிக் கொண்டு நாங்கள் இடையறாது உழைப்பதற்குக் காரணம்; எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்று உன் செங்கனி வாய் உதிர்த்தசெம்மாதுளைமுத்துக்களை எங்கள் நெஞ்சப் பேழையில் இட்டுப் போற்றிப் பாதுகாப்பதால்தான்!

எங்களுக்கு நீ போதித்தவை, ஒன்றா இரண்டா? எண்ணிக்கையில் அடங்கக் கூடியவைகளா?

தோழமை உணர்வின் தூய்மையைஉணர்த்தினாய்.

குடும்பப் பாசத்துடன் அரசியல் இயக்கத்தை நடத்திட முடியுமென்பதை நடைமுறையில் நிலை நாட்டினாய்;

மக்களாட்சித்தத்துவத்தின்மாண்பினை இயம்பினாய். மக்கள் குரலே மகேசன் குரல் என முழங்கினாய்.

சமத்துவம், சமதர்மம் என்பவை, வெறும் காகித மலர்களாக இல்லாமல் செயல் வடிவம் பெறப் பணி புரிவதே நமது இலட்சியமெனக் கூறினாய்.

மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு இவற்றைப் பேணிப் பாதுகாக்கும் உணர்வு மங்கிடலாகாதென உரைத்தாய்.

வேற்றுமையில் ஒற்றுமை காண்போம். இல்லாமையை இல்லாமல் ஆக்குவோம்- இந்தியாவின் ஒருமைப்பாடு-இறையாண்மை காப்போம் என முன்மொழிந்து, எங்களை வழிமொழியச் செய்தாய்!

பாதுகாப்பு அரணாவோம் நாட்டுக்கு-பகைநுழைய நினைத்தாலே அந்த நினைப்பை அறுப்போம் எனச் சூளுரைத்துச் சுடர்முகம் தூக்கினாய்!

பகுத்தறிவுக் கொள்கை திக்கெட்டும் பரப்பினாய்- தேர்தலைப் பற்றிச் சிந்திப்பது மட்டுமல்ல; அடுத்த தலைமுறையினரைப் பற்றிச் சிந்திப்பதே தி. மு. கழகத்தின் இலட்சியமென விரித்துரைத்தாய்!

உடன்பாடுகள், உறவுகள் தேர்தல் நேரத்தில் பிற கட்சிகளுடன் ஏற்படினும் கழகம் கட்டிக் காத்து வரும் தலையாயகொள்கைகளுக்கும் தனித்தன்மைக்கும் ஒரு துளி ஊறு நேரிடவும் இடம் தர மாட்டோம் என சங்கநாதம் செய்தாய்!

ஒரு தாய் வயிற்றில் இத்தனை பேரும் பிறந்திட அந்தத் தாயின் வயிறு இடம் தராத காரணத்தால் தனித் தனித் தாய்கள் வயிற்றில் பிறந்து உடன்பிறப்புக்களாய் ஒன்று சேர்ந்திருக்கிறோம் என உணர்ச்சிக் காவியம் படைத்து வங்கக்கடலிலே எங்கள் ஆனந்தக் கண்ணீரைக் கலந்திடச் செய்தாய்!

அந்த வங்கக் கடலோரம் படுத்துறங்கி, எங்கள் துன்பக் கண்ணீரை உன் கல்லறை மீது கொட்டிக் குளிப்பாட்டும் நேரம் இவ்வளவு விரைவில் வரும் என்று நாங்கள் எதிர்பார்க்கத்தானில்லை.

அண்ணனே, உன் ஒவ்வொரு ஆண்டு பிறந்த நாளிலும் மகிழ்ச்சியும் சோகமும் இரண்டறக் கலந்த ஒரு புதிய கலவை உணர்வையல்லவா நாங்கள் பெறுகிறோம்.

இன்பமும் துன்பமும்தானப்பா இலட்சியப் பாதையில் மாறி மாறி வரும் சில சமயம் இணைந்தும் வரும் என்ற கருத்தை உன் பிறந்தநாள் வாயிலாக எங்களுக்குச் சொல்லிக் காட்டுகிறாய்; இல்லையா அண்ணனே!

உன்னுடன் சேர்ந்து வளர்ந்த எங்களுக்கு, உன்னால் ஆளாக்கப்பட்ட எங்களுக்கு — நீ என்ன நினைக்கிறாய்; என்ன கட்டளை பிறப்பிக்கிறாய்; என்பதெல்லாம் தெரியும்.

எங்கள் உயிர் அணு ஒவ்வொன்றிலுமிருந்து எங்களை இயக்குகின்ற தலைவனே! நீ வகுத்ததே எங்களுக்கு வழி! நீ இட்டதே எங்களுக்குக் கட்டளை! வாழ்க நீ; தமிழ் வையகம் வாழ்ந்திடவே!

அன்புள்ள தம்பி,

மு. க.



திடம் இருக்கிறதே, அது எளிதில் பெறமுடியாத, ஆனல் விலை மதிக்கமுடியாத மிகச்சிறந்த பண்டமாகும்.''

ஃ ஃ ஃ

''எவ்வளவு உயரத்தில் இருப்பவர் எவ்வளவு கேவலமான இழி மொழிகளை— பழிச் சொற்களைக் கொட்டினலும், 'நாம் நம் உற்சாகத்தை — உழைக்கும் திறனை இழக்கவில்லை; கொள்கை — கோட்பாட்டை மறக்காமல் பணியாற்றுகிறேம்' என்பதனை உணர்ந்து பணிபுரியும் வீரர்களைக் கொண்டது தி.மு. கழகம்''

ஃ ஃ ஃ

''அஞ்சா நெஞ்சம் படைத்த இலட்சிய வாதிகள்தாம் ஒரு நாட்டிற்குக் கிடைக்கக்கூடிய ஒப்பற்ற செல்வங்கள். ஏனெனில், பணம் வெறும் இரும்புப் பெட்டியில்தான் இருக்கும்: ஆனல் . இந்தச் செல்வங்களோ மக்களின் இதயப் பெட்டிகள்தோறும் இருக்கும்.''

ஃ ஃ ஃ

''தடைகளைக் கண்டு தயங்கினல் எடுத்துக் கொண்ட காரியத்தை எந்தக் காலத்திலும் நிறைவேற்ற முடியாது. தடைகளின் தன்மையை அறிந்து அதற்கேற்ப பணியாற்றினல் மட்டுமே வெற்றி காண முடியும்.''

ஃ ஃ ஃ

''மலத்திலிருந்து எரு கிடைக்கிறது. அந்த எருவினை இட்டால் மணம் கமழும் பூச்செடி மலரும்; உள்ளத்தை மலமாக்கிக் கொண்டவர்கள், தூற்றலை நம் மீது தூக்கி எறிகிறர்கள். அந்தத் தூற்றல் எரு நமக்கு வெற்றி என்ற மல்லிகையைத்தரும்.''

ஃ ஃ ஃ

''வீசப்படுபவை வீழ்ந்துபடும்; நிலைத்து நிற்பது நிமிர்ந்து நிற்கும்.''

ஃ ஃ ஃ

''சனநாயகம் தழைத்தோங்கிட ஒவ்வொருவரிடமும் சனநாயக மனநிலை — மனஉரம் — மனப்பாங்கு வளர வேண்டும்; எத்தகைய அறைகூவலையும் ஏற்கத்தக்க சனநாயக நல்லுணர்வைப் பெறவேண்டும்.''

ஃ ஃ ஃ

''பசிப்பிணி அகன்று— தொழில் வளம் மிகுந்து— தோழமை மலர்ந்து — பகுத்தறிவு ஓங்கிப் பண்பாளர்களாக நமது மக்கள் நல்வாழ்வு பெற்றிட நமது தொண்டு பயன்பட வேண்டும் என்பதே, நாம் மேற்கொள்ள . வேண்டிய வாழ்வின் இலக்கணம்.''



ஃ ஃ ஃ

''எனது இலட்சிய பூமி— எல்லோரும் இன்புற்று வாழும் பூமி. ஒருவரை ஒருவர் சுரண்டாமல், ஒருவரை ஒருவர் அழுத்தாமல், எல்லோருக்குமாக நான் — எனக்காக எல்லோரும் என்ற முறையில் சமுதாயம் அமைக்கப்பட வேண்டும்.''

ஃ ஃ ஃ

''தமிழ் உமது முரசாகட்டும்! பண்பாடு உமது கவசமாகட்டும்! அறநெறி உமது வழித்துணையாகட்டும்! உறுதியுடன் செல்வீர்! ஊக்கமுடன் பணிபுரிவீர்! ஏற்றமிகு வெற்றியினை ஈட்டிடுவீர்! பாட்டு மொழியுடைய நட்பு தாயகம் வாழ — இந்திய சனநாயகம் வாழ — தாங்கள் துணை நின்றிடும் தகுதி பெறச் சென்றிடுவீர்! வென்றிடுவீர்! செயலாற்றுவீர் செம்மல்களே!''.

வாழ்க அறிஞர் அண்ணாவின் புகழ்! வெல்க அவர்தம் சீரிய கொள்கை!



# அரசியல்

உடனடியான அரசியல் லாபத்தை விரும்புபவர்கள், வெட்டுக் கிளி போல இங்கும் அங்கும் தாவுவர். மரம் பழுத்தால் வவ்வால் ஆவர்; புயலடிக்கும் என்று தெரிந்தால் சந்து பொந்துகளைத் தேடிக்கொள்வர்; கஷ்ட நஷ்டம் வருமெனத் தெரிந்தால் காவடி தூக்குவர்; உடனுக்குடனேயே கணக்குப்பார்த்து களிப்படைவர்!

—பேரறிஞர் அண்ணா

நடத்திய அண்ணா அவர்கள் பிற மொழிகளிடம் வெறுப்பை உருவாக்க விரும்பவில்லை. பிறமொழி ஆதிக்கம் எந்தவகையில் இடம் பெறுகிறது என்பதைக் கண்டு அந்த ஆதிக்கத்தை மாற்றித் தாய்மொழிக்கு அனைத்துத் துறையிலும் முதலிடம் கிடைக்கச் செய்வதற்கே பாடுபட்டார்.

தமது மொழி — கலை—நாகரிகம் — பண்பாடு இவைகளிலே ஒவ்வொருவரும் பெருமைப்படுவது இயல்பு எனினும் — பிறமொழி—கலை இவற்றில் வெறுப்பை வளர்க்கும் நோக்குக்கு அவர் இடந்தரவில்லை.

தொன்மை நலம் வாய்ந்த சீரிளமைத் தமிழ் மொழியைத் தாழ்த்தும் மனப்பான்மைக்கு ஏதுவாக நிலவிய கருத்துக்களை மாற்றுவதுவே அறிஞர் அண்ணாவின் நோக்கமாக அமைந்தது.

அதே போன்று தமிழ் இனம் — தமிழ்நாடு என்று அவர் வாதாடிய போதிலும்- "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் பொது நோக்கினை அவர் போற்றி உரைக்க மறந்ததில்லை. உரிமைகளை எடுத்து வைப்பதற்காக சில நிலைமைகளை விளக்கியுரைத்த அண்ணா அவர்கள் — உறவு நிலைகளை மறந்ததில்லை. வேற்றுமைகள் என்னென்ன என்று கண்டுரைத்த போதும்—வேற்றுமைகளுக்கு இடையிலே உள்ள ஒற்றுமைகள் அவரது உள்ளத்திலே என்றும் இடம் பெற்றிருந்தன.

இந்தியாவின் விடுதலையை அவர் வரவேற்றுப் போற்றிய போது சிலர் மாறுபட்டிருந்தாலும் — இந்தியாவின் வரலாற்றில் அரியதொரு பொன்னுளாக அமைந்துள்ள இத்திருநாள் —அனைவராலும் வரவேற்றுப் போற்றப்படவேண்டிய நாள் என்னும் பொது நோக்கை அவர் வலியுறுத்தத் தவறவில்லை.


சிறைச்சாலையில் இருந்த அண்ணா அவர்கள் — சீன ஆக்கிரமிப்புச் செய்தியினைக் கேட்டபோது — இந்தியாவின் விடுதலை எந்த விலை கொடுத்தும் பாதுகாக்கப்படவேண்டும் என்னும் பொது உணர்வு கொண்டுதான் — தமது இயக்கமே — தாய்நாட்டுப் பாதுகாப்புக்குத் துணையாகச் செயல்படவேண்டும் என்று விரும்பி— கழகம் அதன் கட்சிப் பணிகளையே நிறுத்திவைக்கவேண்டும் என்றும் ஆணை பிறப்பித்தார்.

தமிழுக்காக; தமிழனுக்காக, தமிழ்நாடு என்னும் பெயருக்காக — தமிழ்நாடு ஆகிய மாநிலத்தின் உரிமைகளுக்காக வாதாடிய அண்ணா அவர்கள் — அந்த நாட்களிலேயே இந்திய நாட்டின் பொது நலனைப் போற்றி அதன் முழு நலனுக்கும், உரிமைக்கும் தாமும்—தமது இயக்கமும் கடமைப்பட்டதே என்பதை அவ்வப்போது உணர்த்தி வந்துள்ளார்.

ஒரு நாட்டு மக்களிடையே கருத்து வேற்றுமை எப்படி இயல்பாகுமோ — அப்படி வேறு பல இயல்பான வேற்றுமைகள் காணப்படினும் — பொது நோக்கத்திற்காகவும் நாட்டு நலனுக்காகவும் ஒன்றுபட்டு நிற்கவேண்டியவற்றில் ஒத்துழைத்துக் கடமை ஆற்றவேண்டும் என்னும் கருத்து அவரிடம் சிறந்திருந்தது.

எத்தனையோ மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்த அரசியல் தலைவர்கள் பலரிடமும் அண்ணா அவர்கள் மதிப்பு வைத்துப் பழகியதும் பொது நோக்கத்துக்காக அவர்களுடன் ஒன்றுபட்டு நின்று ஒத்துழைத்ததும் நாடு அறிந்ததாகும். அதே போன்று பொது நோக்கம் ஒன்றினைப் போற்றுமிடத்து தமது கொள்கையை மாற்றிக்கொள்வதனையும் அண்ணா அவர்கள் முறையாக மேற்கொண்டுள்ளார்.

ஒருகாலத்தில் பிரிவினைக் கருத்தினை ஏற்று வாதாடிய அண்ணா அவர்கள் — தேசத் தலைவர்கள் பலரும் அரும் பாடுபட்டுத் தேடிய இந்தியாவின் விடுதலைக்கு வேற்று நாட்டவரால் விபரீதம் ஏற்பட இடமாகக் கூடும் என்று கண்டபோது பிரிவினைக் கொள்கையை முற்றும் கைவிட்டு இந்தியாவின ஒன்றுபட்ட இறைமாட்சியைப் போற்றி அதன் பகுதியான தமிழ்நாட்டின் தகுதி நிலையை உயர்த்தும் வழி வகையில் தமது பணியை மேற்கொண்டார்.



நாலு கோடி தமிழ் மக்களின் நல்வாழ்வும் முன்னேற்றமுமே கருதி அரசியல் நடத்திய அண்ணா அவர்கள்- அதற்கு ஏற்ப எந்தந்த வகையில் தமது இயக்கத்தைச் செயல்படுத்த முடியுமோ அவ்வாறு செயல்படுத்தி வெற்றி கண்டார்.

ஜனநாயகம் ஓர் அரசு அமைப்பு முறை, ஆட்சி நெறி என்பது மட்டுமல்ல அது ஒரு பண்பாடு — மக்கள் வாழ்வில், எண்ணத்தில் கலந்து உறையும் ஒரு கோட்பாடு என்று கருதியவர் அண்ணா. அந்த அடிப்படையான ஜனநாயகப் பண்பாட்டையே தமது உயர் நோக்கமாகக் கொண்டு, யாரிடத்தும் பகை உணர்வுக்கு இடமின்றி, மாற்றுக் கட்சியினரையும் மதித்து, கருத்து வேற்றுமைக்கு இடம் அளித்து பெரும்பான்மையோரும் அடித்தட்டு மக்களும் உரிமை உள்ள நல்வாழ்வு பெறச் செய்வதையே தமது உயர் நோக்கமாகக் கொண்டு கழகத்தினை இயக்கி வந்தார்கள்.

அந்த உயர் நோக்கினைப் போற்றி அண்ணா வழியில் அயராது உழைப்பதே அவரது 68-ம் பிறந்த நாள் விழாவைப் போற்றிக் கொண்டாடுகிற நாம் — மேற்கொள்ள வேண்டிய உறுதியாகும்.

---

# அழுகின்றேன் தொழுகின்றேன்

**நந்திவர்மன்**

மறைந்தாலும் நின்னுடலம் மறையாது நின்புகழே!
மடிந்தாலும் நின்னுருவம் மடியாது உன்னறிவே!
குறைந்தாலும் வடஇமயம் குறையாது நின்படைகள்;
குறைமாந்தர் கூக்குரலால் குலையாது நின்அணிகள்
உறைந்தாலும் பனிபோலே உருகிடுமே பகைவருள்ளம்;
உன்மொழியால் இளகுமவர் உள்ளமெலாம் அன்புவெள்ளம்
அறைந்தாலும் அடித்தாலும் அன்புவழி நின்றேதான்
அகிலத்தை வென்றிபெற வழிகாட்டி ஆனாய் அண்ணா!

இழிமொழிகள் வீசுவோரை இளநகையால் எதிர்கொள்ளும்
இசைப் பேச்சுக் கலைஞருன்றன் இளவலென உலகுசொல்லும்
பழியுரைகள் பொழிவார்க்கும் பாசநெஞ்சம் காட்டிநிற்கும்
பாதகங்கள் செய்வார்க்கும் பண்புக்கரம் நீட்டிநிற்கும்
அழியாப்புகழ் கலைஞரையே அவனிக்கு நீ தந்தாய்
அடுபகையின் நடுவினிலும் அக மகிழ்வை எமக்களித்தாய்
வழிகாட்டி உனைத்தொடர்ந்து வரலாறு சமைப்பதற்கு
வாரிசாக கலைஞரையிவ் வையகக்கிற் களித்தாயே!

விழிமூடி நீ துயிலும் [illegible]
வழிகாட்டி ஒளிவிளக்கை வழங்கித்தான் மறைந்திட்டாய்
பழிகோடி குவிந்தாலும் பகைசாடி மகிழ்ந்தாலும்
பதறாமல் நடக்கின்ற படைத் தலைவன் தந்திட்டாய்
வழிதேடி உன்னிடத்தில் வரும்வரையில் இதயத்தை
வளர் புகழார் கலைஞரிடம் வாரித்தான் கொடுத்திட்டாய்!
மொழிதேடி அழுகின்றேன் மூதறிவே உனை வாழ்த்த!
முகம் புதைத்துத் தொழுகின்றேன்; மூத்தோனுன் நினைவுகளை:



# அண்ணா

# அவர் எனக்கும் தலைவர்



## டாக்டர் ஏ. ஆர். முதலியார்

**பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைத்திறப்பு விழா 'பூம்புகாரின் இந்திரவிழா'வோ என்னும்படி மகத்தான திரு விழாவாக சென்னையில் 1—1—68 அன்று நடைபெற்றது. லட்சக்கணக்கானோர் திரண்டிருந்த அவ்விழாவில் டாக்டர் ஏ. ஆர். முதலியார் அவர்கள் அண்ணா அவர்களின் சிலையைத் திறந்து வைத்து ஆற்றிய பேருரை வரலாற்றுமுக்கியத்வம்வாய்ந்ததோர் கருத்துக் கருவூலமாகும். டாக்டர் ஏ. ஆர். அவர்களின் உரையிலிருந்து இக்கட்டுரை தொகுக்கப்பட்டுள்ளது.**

எனது வாழ்நாளிலேயே மிகவும் மகிழ்ச்சி தரத்தக்க ஒரு நிகழ்ச்சியை இப்போது நடத்தி வைக்கிறேன்.

மக்களுக்காக வாதாடுகின்ற மக்கள் தொண்டன் இம்மாநிலத்தையும், இதனை அடுத்துள்ள தென்னக மாநிலங்களிலும் 'பிறர் கண்டு மதிக்கும்படி அவற்றைத்தலை நிமிரச் செய்த ஒருவரது சிலையை இப்போது நான் திறந்து வைத்திருக்கிறேன்.

திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவரை நான் நாற்பது ஆண்டுகளாக அறிவேன். 1927 முதல் அவரது வாழ்க்கையை நான் கவனித்து வருகிறேன்.

பல சந்தர்ப்பங்களில் அவரது ஏற்றம் கண்டு மகிழ்ந்திருக்கிறேன். வேறு சில நேரங்களில் அவரது துன்பங்களைக் கண்டு நான் மனவேதனையும் ப்ட்டது உண்டு.

தமிழ்ப் பேச்சாற்றலில் அவர் எல்லோரையும் மீறியவர். ஆங்கிலத்திலும் அவருக்கு இணையானவர் உலகில் இல்லை. நா — நலம் வாய்ந்த பேச்சாளர் அவர். ... நா—நலம் மட்டுமே வேறு சிலரிடம் இருக்கக் கூடும். ஆனால் கருத்தாழத்தோடு கூடிய நலம் காண்பதரிது.

அண்ணாவின் சொற்பொழிவெல்லாம் கருத்துக்கள் குவிந்திருக்கும். இதுவே ஒருவரை மனிதர்க்கெல்லாம் தலைவராக்குகிறது.

1934 —35ம் வருடம் முதலே சுயமரியாதை இயக்கத்தில் அவர் இருந்தார் என்றாலும், தமிழ் மொழியின் உயர்வுக்கும், அதன் உரிமைக்கும், மக்களுக்கான வேறு பலவற்றுக்குமாகப் பாடுபட்டார் என்றாலும் — அவரது சொந்த ஊராரே கூட அவரது சிறப்பினை உணராதிருந்தனர். ஆனால் அவரோ தன் பணியினைத் தொடர்ந்தார்.

இன்று அவர் எல்லா மக்களின் உற்சாகமிக்க நல்லாதரவினையும், உயர்மதிப்பினையும் பெற்றுத் திகழ்கிறார்.

அண்ணா என்று அழைக்கப்படுகிற அவர் ஒரு சர்வாதிகாரியல்ல என்பதால் எல்லோரும் அவலர அண்ணா என்றழைக்கும் போது அவர்கள் உள்ளத்திலெல்லாம் பிரிக்கமுடியாத சகோதரபாசம் இழையோடுகிறது.

அண்ணா அவர்களின் பாதை கடுமையானதாக இருந்தது. சோதனை மிக்க நாட்களை அவர் கடந்து வந்தார். எல்லாவற்றையும் விட்டுத் தனிமையில் ஒதுங்கி விட அவர் எண்ணியதுண்டு.

ஆனாலும் தமது இடைவிடா முயற்சி காரணமாக அவர் இன்றைய உயர் நிலையை அடைந்துள்ளார்.

ஆபிரஹாம் லிங்கனின் வாழ்க்கையைப் பற்றிச் சொல்லும்போது மரக்குடிலிலிருந்து வெள்ளை மாளிகைக்குச் சென்றார் என்பார்கள். அது போலவே அண்ணா அவர்களின் வாழ்க்கையும் அமைந்துள்ளது.

தமிழகத்துக்குப் பெருமையும், மதிப்பும் தேடியுள்ள அவர், இதன் மூலம் இதர தென் மாநிலங்களும் மதிப்பைப் பெறச்செய்தார்.

அண்ணா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இந்தச் சட்டமன்றத்தில் இருந்தபோது வெல்லற்கரியவர்கள் என்று கருதிக்கொண்டு ஆட்சி பீடத்திலிருந்தவர்கள் அவரை எப்படியெல்லாம நடத்தினார்கள் என்பது நண்பர் நெடுஞ்செழியன் போன்றவர்களுக்கு, நினைவிருக்கும்.

இன்று அதே அண்ணாவும் அவரது தோழர்களும் மத்திய அரசிலே வீற்றிருப்பவர்களுக்கு வரவு – செலவு திட்டத்தைத் தயாரித்திடும் வகை என்ன என்பதைச் சொல்லித் தரத்தக்கவர்களாக இருப்பதைக் காண்கின்றோம்...,

அறிவே சக்தி. அது வென்றே தீரும். மடமை தோற்கும்.

அறிவைப் பெறுவதில் தங்குதடையற்ற பயணத்தை நாம் தொடருவோம். ...அன்பு அண்ணாக இருக்கும் முதலமைச்சருக்கு ஆதரவாக அவர் பக்கம் நின்று அவர் காட்டும் வழியில் தமிழ்மொழியின் புகழுக்குத் தமிழ்ச் சமுதாயத்தின் புகழுக்கு உழைத்திடுவோம்.....

1962-ல் தேர்தல் நேரத்தில் காஞ்சிபுரத்தில் ராஜாஜியுடனும், அண்ணாவுடனும் பேசினேன். நல்லதோர் எதிர்க்கட்சியை இந்தத் தேர்தலில் ஏற்படுத்துங்கள் என்று அப்போது சொன்னேன்.

1967 தேர்தலில் தி.மு. கழகம் ஆட்சிப் பொறுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்படும் என்றும் அப்போது நான் சொன்னேன்.

அன்று அண்ணாவைத் தோற்கடித்தார்கள். அதற்கு அவர்கள் கையாண்ட முறைகளைச் சொல்லவும் கூசுகிறது. அதன் விளைவு: அண்ணா மாநிலங்களவைக்குச் சென்றார்.

அங்கு அவர் ஆற்றிய முதல் பேச்சே டில்லியைக் குலுக்கியது. தி.மு.க. கணிப்பில் கொள்ளத்தக்கதொரு சக்தி என்று நேரு தம் தோழர்களிடம் சொன்னார். அன்று துவங்கியது அண்ணாவின் ஏற்றம்.

இன்று அவர் நடத்திச் செல்லும் இந்த அரசே எல்லாவற்றிலும் நிலையான அரசாக குன்று போன்ற உறுதியுடன் இருக்கிறது.

மத்திய அமெரிக்காவில் குமுறி அடங்கி இப்போது புகை கூடக் கக்காத பழைய எரிமலைகள் உண்டு. அதுபோலச் சிலர் இருக்கின்றனர். அவர்களது ஏச்சுகளைப் புறக்கணித்து உறுதியோடும், வலிவோடும் நாம் முன்னேறுவோம்.

காலத்தின் தேவையை நிறைவு செய்ய வந்த தலைவர் அண்ணா. அண்ணா நம் தலைவர். ஆமாம் — அண்ணா உங்களுக்கு மட்டுமில்லை எனக்கும் தலைவரே..

★

# காஞ்சிக்கு அண்ணா வந்த கடைசி நாள்....



கே.டி.எஸ்.மணி

1969 ஜனவரித் திங்கள் 13-ஆம் நாள். அன்றுபோகி.

பொங்கல் — தமிழர் திருநாள் — இந்நாளை எப்படியெப்படியெல்லாம் கொண்டாட்வேண்டும் என்று பேசியும், எழுதியும் இந்தத் தமிழ்நாட்டைத் தட்டி எழுப்பிய அண்ணன் 'காஞ்சிக்கு வருவாரா மாட்டாரா என்ற ஐயப்பாட்டுடன் இருக்கும்போது எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் அண்ணியாருடன் அண்ணா வந்திருப்பதாக பகல் 12 மணி அளவில் செய்தி அறிந் அவரது இல்லம் விரைந்தேன்.

அவரது இல்லத்தின் பெரிய கதவு தாளிடப்பட்டிருந்தது.

இந்த நிலை எனக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்தது.

பகல் 2.45 மணிக்கு மீண்டும் அண்ணாவின் இல்லம் சென்றேன். 'அண்ணா படுத்திருக்கிறார்' என்பதை அறிந்து கூடத்தில் அமர்ந்திருந்தேன்.

'குடும்பத்தாருடன் மட்மட்டுமே தனியாக இருக்க எண்ணி யாரையும் அனுமதிக்காமலிருக்க கதவு தாளிடப்பட்டு விட்டது? என்று கூறி என்னை மூன்று மணிக்கு வரும்படி சொன்ன அண்ணாவின் பாதுகாப்பு அதிகாரி வருத்தத்தோடு பார்த்தார்.

3—15 மணி :

அண்ணா எழுந்து வெளியே வந்தார்.

''மணி! வெளியே போய் போய்வரலாமா?'' என்றார். ''போகலாம் அண்ணா!'' என்றேன்.

''ஆள் நடமாட்டம் இல்லாத இடமாகவும்; யாரும் நம்மைச் சூழ்ந்து கொள்ளாத இடமாகவும் போகவேண்டும். எங்கே போகலாம்?'' — இது அண்ணாவின் கேள்வி.

'அரக்கோணம் வழியாக உள்ள வெள்ளைக் கேட்டுக்குப் போய், அங்கிருந்து வேலூர்ச் சாலையில் சிறிது தூரம் போனால், தாங்கள் எண்ணுவதுபோல் தனித்து இருக்கலாம்!'' என்றேன்.

''என் வண்டி வேண்டாம். யாருக்கும் அடையாளம் தெரியாத வண்டியாகத் தயார் செய்; நம்முடன் போலீசு — செக்யூரிடி எதுவும் வரவேண்டாம் என்று சொல்!'' என்றார் அண்ணா.

கௌதமன் அப்போது வாங்கியிருந்த புதிய பியட் காரைப் பயன்படுத்தலாம் என்று முடிவு செய்தோம். வண்டியை கௌதமனே ஓட்டுவது என்றும் உடன் இரா. செழியன் எம். பி. வருவது என்றும் முடிவு செய்து வண்டியை மேற்கு நோக்கி நிறுத்திவிட்டு நான்; இளங்கோவன், பரிமளம், சுந்தரேசன் டிரைவர் சண்முகம் ஆகியோர் செல்ல இளங்கோவனின் அம்பாசிடர் காரைத் தயார் செய்துவட்டு, அண்ணாவிடம், ''புறப்படலாம் அண்ணா!'' என்றேன்.

அவரும் உடனே புறப்பட்டு வண்டியில் ஏறினார். ஆனால் அண்ணா புறப்பட்ட வண்டி சின்னக்யோ காஞ்சிபுரம் சுங்கச்சாவடிவழியாகப் போயிற்று. எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

செவிலிமேடு செல்லும் மிலிட்டரி சாலை வழியாகப் போய்க்கொண்டிருந்த நீல பியட், பச்சயப்பன் கல்லூரி படுகிற அளவில் நின்றது.

வண்டியிலிருந்து இறங்கிப் போய், ''என்ன அண்ணா? இப்படி வந்துவிட்டீர்கள்? வெள்ளைக் கேட்டுக்குப் போகத்தானே சொல்லி வைத்தேன்?'' என்று அவரது மனநிலையை உணராமல் கேட்டேன்.

''அதிருக்கட்டும். கேன்சர் ஆஸ்பத்திரி கட்டுவதற்கு கலெக்டர் இடம் பார்த்தாராமே! அது எந்த இடம்?'' என்றார் அண்ணா.

''அந்த இடம் வெள்ளைக் கேட் அருகில் இருக்கிறது அண்ணா!'' நான் சொன்ன பதிலைப்பற்றிக் கேட்பதிலும் அண்ணாவின் விருப்பம் பச்சையப்பன் கல்லூரிக் கட்டிடத்தை ரசிப்பதிலேயே பெரிதும் இருந்தது. பிறகு நிதானமாகத் திரும்பி, ''ஓ! அந்த இடம் இங்கு இல்லையா? அப்படியானால் இங்கே என்ன பார்க்கலாம்?'' என்றார்.

''தொழில் பேட்டை; மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்.''

''சரி ஏறு!'' என்றார் அண்ணா. வண்டிகள் தொழிற் பேட்டைக்கு விரைந்தன. அங்கே இரண்டொருவர் பணியாற்றிக் கொண்டிருந்தனர். திடீரென்று முதலமைச்சரைக் கண்டதும் பதைப்பு அங்கே அவர்களுக்குக் கை கால் ஓடவில்லை. கட்டப்பட்டிருந்த நான்கு பிளாக்குகளையும் பார்த்து விட்டு கலெக்டர் அலுவலகத்தைப் பார்க்கலாம் என்று புறப்பட்டார். அண்ணா.

அப்போது அவர் தன் வயிற்றின் அடிப்பாகத்தை இடது கையால் தாங்கியபடி பட்ட வேதனை, அவர் முகச் சுழிப்பிலேயே தெரிந்தது.

கலெக்டர் அலுவலகத்துக்கு வண்டி வந்தது. அங்கே வேலை செய்வோர் அதிகமாக இருப்பதைக் கண்டதும் அண்ணா, ''வண்டியை நிறுத்தாததே. மெதுவாக உள்ளே போய்ப் பார்த்துக் கொண்டே போய்விடலாம்'' என்றார். வண்டியில் இருந்தபடியே அனைத்தையும் பார்த்துக்கொண்டு வெளியே வந்து காவலான் தெரு திரும்பி — பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியின் பக்கம் வண்டி வநது கொண்டிருக்கும்போது என் அலுவலகமான எம். எம். வொர்க்ஸ் கட்டிடம் அருகே அண்ணா வண்டியை நிறுத்தச் சொன்னார்.

வண்டியிலிருந்து கிடுகிடுவென்று இறங்கி எம். எம். வொர்க்ஸ் கட்டிடத்துக்குள் சென்று நாற்காலியில் அமர்ந்து கொண்டார். அங்கு அரு. முருகேசன் சுதர்சனம் நாயுடு, சுந்தசாமி ஆகியோர் இருந்தனர் நகரக் கழகத்திற்கான பிளானைக் கேட்டு வாங்கிப் பார்த்தார். உடனடியாக கழகக் கட்டடம் கட்டவேண்டும் என்று கட்டடம் பற்றிய யோசனைகளையெல்லாம் கூறினார்.

மாலை ஆறு மணி ஆகிவிட்டது.

''அண்ணா பனியில் வெளியே இருக்கக்கூடாது என்று டாக்டர் கூறியுள்ளார். நேராக வீட்டுக்கே போகலாம்'' என்றேன்.

''மணி, வீடு கட்டும் சங்கத்தைப் பார்த்துவிட்டுப் போய்விடலாம். நேராக மாமல்லன் வீடு கட்டும் சங்கத்தின் இடத்துக்குப் போ'' என்றார்.

(தொடர்ச்சி 16-ம் பக்கம்)





# மற்றொன்று வாராது!

கவிஞர் கரிமேலழகர்




"படுக்கையின்மேல் கால்மடித்தே உட்கார்ந் திட்டார்!
பத்திரிகை கையினிலே; படித்தா யிற்றோ?
திடுக்குற்றே அடிக்கடிவா யிற்பு றத்தில்
சிந்தைவிழி யிரண்டையுமே பதித்திருந்தார்!
நடுக்குற்ற நடைகொண்டார் வந்து சேர்ந்தார்
நாழியென்ன ஆயிற்று? தூக்கம் இன்னும்!
படுக்கையிலே தாமதமோ? வழக்கம் போல்தான்
படுத்தாரா இன்றைக்கும்? எழுப்ப வில்லை?

ஊரிருக்கும் நிலவரங்கள் உணர மாட்டீர்!
ஒருசெய்தி தெரியவில்லை! இருளோ எங்கும்!
யாரிருக்கின் றார்இல்லை என்ப தெல்லாம்
எனக்கொன்றும் புரியவில்லை! நடந்து செல்லும்!
பேரிருக்கின் நீர்அய்யோ; முடமா னேன்நான்!
பெரியவன்தான் பெயரளவில்; உரிய வண்ணம்
நீரிருக்க முடியவில்லை! பழைய வேகம்
நேர்மை யெலாம் இழந்தீரோ? எனவெ டித்தார்!""

நடமாடி என்னுடலில் சொட்டு ரத்தம்—
நல்லஉயிர் நிற்குமட்டும் ஓய மாட்டேன்!
முடமாகவில்லை என்றன் உணர்ச்சி யாவும்!
முந்தையநாள் நிலைமைகளை மறப்பேனோ நான்?
திடமாக இருக்குமாறு வேண்டு கின்றேன்!
திக்கெட்டும் நேற்றிரவில் இரண்டு பேரும்
கடமையினை ஆற்றுதற்குச் சென்று மீண்டோம்!
கண்டவற்றை விளக்கமுடன் வந்து சொல்வார்!

பந்தயத்துக் குதிரையெனக் கீழ்வான் தோன்றும்
பரிதியென உறுதியுடன் விரைவு கொண்டு
வந்துவிட்டார்; வணக்கமென்றார்; ஆகா, ஆகா,
வயோதிகமே வாலிபமாய் மாறிற் றென்றால்—
எந்தவிதம் உணர்ந்திடுவேன் மகிழ்ச்சி வெள்ளம்
எங்கெங்கும் வழிந்தோடி நிறையுங் காட்சி?
சிந்தையணு ஒவ்வொன்றும் சிலிர்க்கச் செய்த
தென்புலத்துச் சிங்கஏறு கர்ச்சிக் கின்றார்:

"அழுதிடவோ, அயர்ந்திடவோ, நிலைமை யில்லை;
அப்பாநாம் இறைத்தநீரும் விழலுக் கல்ல!
தொழுதிடவும், துவண்டிடவும், தொய்வு நேர்ந்து
தூக்கிநிறுத் திடவுமான இழிவும் இல்லை!
பழுதொன்றும் ஏற்படாது! வீழ்ந்தா ரென்று
பகைத்தோரே உதைத்தோடிப் பாழாய்ப் போனார்!
விழுதிறக்கி, வேர்பெருக்கி, ஆழ ஊன்றி,
விண்ணளாவி ஆலாகி நிற்றல் கண்டேன்!



நீறுபூத்த நெருப்புக்குள் வெப்பம் போமோ?
நீர்மூட்டும் உணர்வுத்தீ — நீர்ஒன் றாலே
ஆறுவதும் இயல்பில்லை? விசிறி கொண்டே
அஞ்சாமல் களைக்காமல் தனித்து வீசி
மாறுபடா துழைக்கின்றான் உமது செல்வன்!
மண்ணுக்குள் கண்ணுக்குத் தெரியாச் சத்தை
வீறுகொளப் பயன்படுத்து கின்றான் தம்பி;
வெற்றியன்றி மற்றொன்றும் வாரா தய்யா!



## நல்லெண்ணம்

உலகிலேயே கேட்பதைவிட அதிகமாக தர முடிந்ததும்; கொடுப்பதைவிட அதிகமாக எடுக்க முடிந்ததும் நல்லெண்ணம் ஒன்றுதான்!

# அண்ணா என்றும் வாழ்வார்

க. ராசாராம்

நமது அண்ணன் அறிஞர் அண்ணாவைப்பற்றி எண்ணும்தோறும், எண்ணும்தோறும், உள்ளத்தில் மகிழ்ச்சி பிறந்த வண்ணம் இருக்கும். எத்துணையோ பேர் உலகில் பிறந்தார்கள்; மறைந்தார்கள். நமது அண்ணனைப்போல் தமிழர் தம் உள்ளம் தோறும் நீக்கமற நிறைந்திருக்கும் தலைவரை நான் கண்டதேயில்லை.

ஒவ்வொருவருக்கும் ஒரு குண இயல்பு. நமது அண்ணனின் இயல்பு கண்டு பாராட்டாதவரே இலர் எனலாம். கடுஞ் சொல் கூறி நான் கேட்டதேயில்லை. கோபத்தை மவுனத்தாலேயும், விழிகளாலும் மட்டும் காட்டிவிடும் தன்மை கொண்டவர். சிலருக்கு சுற்றுவது பிடிக்கும். அமைதியாக ஓரிடத்தில் தங்கி படிப்பது பிடிக்காது. என்பவருக்கு அது இயலாது. நமது அண்ணனோ அதற்கு நேர்மாறானவர். சுற்றுவதிலும் சளைத்தது கிடையாது. படிப்பதிலும் அலுத்தது கிடையாது. காரில் ஏறி மூன்று நாட்கள், முப்பது கூட்டங்கள் என்றால், மூன்று நாட்களும் உறக்கமின்றி சில வேளைகளில் உணவின்றி சுற்றி வருவார். முப்பது கூட்டங்கள் என்றால், முப்பதிலும், மாறி, மாறிப் பேசுவார்: நகரத்தில் அவர் பேச்சு ஒரு மாதிரி இருக்கும். கிராமத்தில் அந்த மக்களுக்கு ஏற்றதாக இருக்கும். கல்லூரிகள் என்று கண்டுவிட்டாலோ, சொல்லவே வேண்டியதில்லை. இளைஞர்களைத் தட்டி எழுப்பும் பேச்சாக அது அமைந்திருக்கும், பயணம் முடித்து களைப்புத் தீர பகலெல்லாம் தூங்கும் பழக்கம் அவருக்குண்டு. அதற்குப் பிறகு எழுதுவதும், படிப்பதும்என்றுதொடங்கிட்டால் அவரைச் சுற்றி அமைதி தவழ்ந்திடும்.

அவரை ஏற்றிச் சென்ற கார் பழுதடைந்தது. அவரது டிரைவர், சுந்தரகூட உழைத்து, உழைத்து இயற்கையெய்தினர். ஆனால் அறிஞரோ, தனது பயணத்தை கடைசிவரை தொடர்ந்து செய்து கொண்டே இருந்தார். வசதி ஏதுமற்ற பயணம். ஆனாலும் அவர் கழகத் தோழர்களின் அழைப்பினை ஏற்றிடத் தயங்கியதில்லை.

எவ்வளவோ நூல்களை அண்ணா படித்தார். படித்த பலவற்றை தமிழ்நாட்டிற்குத் தந்திட வேண்டும் என்ற பேராவல் அவருக்கு இருந்தது. படித்ததையெல்லாம் தமிழுலகிற்குத் தந்திட நேரம்தான் அவருக்கு இல்லை.

அவர் நமக்கு விட்டுச் சென்ற கருத்துக் கருவூலங்களை நான் எண்ணிப் பார்க்கிறேன். அப்படியே அசந்து போகிறேன். எழுத்தாளர் எவராவது அவரிடம் அணுகி தனது நூலுக்கு முன்னுரை கேட்பார்கள். முன்னுரை என்பது ஏதோ தனக்குத் தெரிந்த எழுத்தாளர் கேட்டாரே என்பதற்காக, எழுதப்பட்ட ஒன்றாக இருக்காது; வந்த எழுத்தாள நண்பரிடம் நூலைத் தன்னிடம் தந்துவிட்டு மறுநாள் வரும்படிக் கூறுவார். அவ்வளவுதான். அது எவ்வளவு பெரிய நூலாக இருந்தாலும் சரி, ஆங்கிலமானாலும் சரி; தமிழானாலும் சரி. ஒரே இரவில் படித்து முடித்து அதற்குத் தக்கதோர் முன்னுரையை எழுதி வைத்துவிட்டே உறங்கப் போவார்கள். எழுத்தாளர் உயர்ந்தவரா? தாழ்ந்தவரா? என்று அவர், அந்த எழுத்தாளரின் எழுத்தின் மூலம்தான் எடைபோட்டாரே தவிர, அவரது பொருளாதார நிலை கண்டு என்றும் எடை போட்டதேயில்லை. அது அண்ணாவின் தனி இயல்பு.

முன்னுரை கேட்டு வரும் நூல்களில் கவிதை நூல்கள் கிடைத்திடுமாயின், அவருக்கு அதிலே ஒரு தனி இன்பம். கவிதை நூல்களுக்கு அவர் எழுதிய முன்னுரைகள், அநேகமாகச் கவிதைநயம் சொட்டச் சொட்ட அமைந்திருப்பதைக் காணலாம். இலக்கியம் என்றால் அதில் தனது எண்ணத்தை அப்படியே வடித்திடுவது அண்ணாவுக்குக் கைவந்த கலையாகும். கலைஞரின் சிலப்பதிகாரத்திற்கு அறிஞர் அவர்கள் எழுதிய முன்னுரை படிக்கப் படிக்கத் தெவிட்டாத ஒன்றாகும். அதேபோல் புலவர் குழந்தை எழுதிய இராவண காவியத்திற்கு அண்ணா எழுதிய முன்னுரை, பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய இலக்கிய ஆய்வுரையாகும் அது.

அவர் எழுதிய முன்னுரைகளைப்பற்றி மட்டும் எண்ணிப் பார்த்தால் ஒரு தனி நூலாகவே அவற்றை வெளியிடலாம்போல் இருக்கிறது. ஒவ்வொன்றும் ஒரு அறிவுச் சுடராகவே விளங்குவதைக் காணலாம். அண்ணா அவர்கள் எளிமையான தோற்றம் கொண்டவரே தவிர, தன்னைத் தவிர மற்றவர்களையெல்லாம் உயர்வாகவே கருதும் பண்பாளர். ஒரு எழுத்தாளர், ஒரு நூலை வடித்திட எத்துணை சிரமப்பட்டிருப்பார் என்பதனை எண்ணி, எண்ணி. மகிழ்ச்சி கொள்ளும் மனம் படைத்தவர் அண்ணா. வற்றாத அறிவும், பரந்த உள்ளமும், அனைவரிடமும் அன்புகொள்ளும் சுபாவமும், அவரது எழுத்துக்களில் பரிணமிப்பதை நாம் கண்டு வந்தோம். கருத்துக் கருவூலங்களை வாரி வழங்கி வந்த அந்தக் கரம் இன்றில்லை. ஆனால் அண்ணா தனது எழுத்துக்களில் என்றும் வாழ்கிறார்!

## இலட்சியவாதி

அஞ்சா நெஞ்சு படைத்த இலட்சியவாதிதான் ஒருநாட்டிற்குக் கிடைக்கக் கூடியஒப்பற்ற செல்வங்கள். ஏனெனில் பணம் வெறும் இரும்புப் பெட்டியில்தான் தூங்கும். ஆனால் இந்தச் செல்வங்களோ மக்களின் இதயப் பெட்டியில் வாழ்வர்!

அறிஞர் அண்ணா



# அண்ணாவின் விஞ்ஞானக் கண்ணோட்டம்

அரிமா

இன்றைக்கு மனித வாழ்வை.

மணம் உள்ளதாக—

மதிப்பு உடையதாக—

மகிழ்ச்சி நிரம்பியதாக—

மாற்றி வருவதே விஞ்ஞானந்தான்.

விழிக்குப் புலப்படுகிற எத்தகைய செயற்கைப் பொருளை எடுத்துக் கொண்டாலும் கூட, அதிலே விஞ்ஞானப் புதுமையே வீசுகிறது ஒளியை!

எண்ணத்துக்கு எழில் வடிவம் தரும் ஏடுகள், அவற்றைத் தவழவிடும் அச்சுப் பொறிகள்—

எண்ணிய இடத்திற்கு இட்டுச் செல்லுகின்ற பேருந்து, கார், புகைவண்டி, விமானம் ஆகிய ஊர்திகள்—

உண்ணுகின்ற உணவைச் சமைக்க மின் அடுப்பு— உடுக்கின்ற ஆடைகளை உருவாக்கும் ஆலை—

உழுது பயிரிட யந்திரக் கலப்பை, 'டிராக்டர்கள்'— விளைந்த நெல்லை அவிக்க, அரைக்க, காயவைத்திடுவதற்கு ஆலைகள்—

பொழுதை இன்பமாகக் கழிக்கத் திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி-

புழுக்கத்தைப் போக்க மின்விசிறி, குளிர் பதனம்—

—அழுக்கைப் போக்க சோப்பு—

—இப்படி எதனை எடுத்துக் கொண்டாலும் மனித வாழ்வின் ஒவ்வோர் அசைவிலும் அணுவிலுங் கூட விஞ்ஞானத்தின் ஆற்றலே வேராக நிற்கிறது.

ஆனால், விஞ்ஞான விளைச்சலை வேண்டிய மட்டும் துய்க்கின்ற நாம்—

விஞ்ஞானிகளைப் போற்ற வேண்டிய அளவுக்குப் போற்றுகின்றோமா? அவர்களுடைய வாழ்க்கை வரலாறுகளை ஓரளவேனும் அறிந்து கொண்டிருக்கிறோமா? அவர்களுடைய வழிகளைப் பின்பற்றி புதுமைகளைப் படைக்கும் ஆர்வத்தைப் பெருக்குகின்றோமா?

—'என்றெல்லாம் வினாக்களைத் தொடுத்தால் பிதுங்கிய உதடுகளே விடையாக வரும்.

அதுதான் போகட்டும்.

'விஞ்ஞான மனப்பான்மை'யாவது வளர்த்துக் கொண்டிருக்கிறோமா — நம்முடைய பிள்ளைகளின் நெஞ்சப்புலத்தில் அதனை முறையாக விதைக்கின்றோமா — என்றால், அதுவும் இல்லை'.



இளம் மாணவர்கள்பாடப் புத்தகத்தில் வரும் விஞ்ஞானத்தைத் தேர்வில் நிறையப் புள்ளிகள் பெறுவதற்காக மனப்பாடம் செய்வதோடு சரி; கல்விச்சாலைகளை விட்டு அவர்கள் வெளியே வந்ததும் அவர்கள் கற்ற விஞ்ஞானக் கல்வி அனைத்தும் கானல் நீராகவே காணாமல் போய் விடும். கனவுக் காட்சியாகவே கலைக்கு உதவாமல் மறைந்துவிடும்.

இல்லையென்றால், 'ஆயுத பூசை' 'சரசுவதி பூசை' என்கிற பெயர்களால் — இங்குள்ள கற்றறிந்த பட்டதாரிகளே

மார்க்கோனியின் மூளையில் உதித்த வானொலிப் பெட்டிக்குச் சந்தனம் பூசுவார்களா?

கிரகாம்பெல் கண்டு பிடித்த தொலைபேசிக் கருவிக்குக் குங்குமப் பொட்டு வைப்பார்களா?

ஜார்ஜ் ஸ்டீவன்சனின் சிந்தனையில் உதித்த புகை வண்டிக்குத் தேங்காய் உடைத்து — வாழை மரங்கள் கட்டி — வழி அனுப்புவார்களா?

'கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பதா? என்பது ஒரு பழமொழி.

இங்கோ யார் யாரோ பெற்றெடுத்த பிள்ளைகளுக்காக — கருவிகளுக்காக —யார் யாரையோ வழிபடுகிறார்கள்- வணங்குகிறார்கள்.

இந்த வழித்தடுமாற்றம் ஏன்?

எதைப் படித்தோம் எதற்குப் படித்தோம் என்கிற அடிப்படைத் தெளிவு ஆராய்ச்சிக்கூர்மை இல்லாமையே!

பழமைப் பாசி அந்த அளவுக்கு நம் மனத்திலே அழுத்தமாகப் படிந்து கிடக்கிறது; மூட நம்பிக்கை அந்த அளவுக்கு நம் சிந்தனையை முடமாக்கிச் சிறைவைத்திருக்கிறது.

இந்த அவல நிலையை நீட்கிட — காரிருளைப் போக்கிய அறிவு வெளிச்சத்தைப் பாய்ச்சிட ஆர்த்தெழுந்த ஒளிக்கோணங்களே தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும்.

தமிழகம் தலைநிமிர்ந்திட தந்தை பெரியாரின் வழியில் வீறுநடை போட்ட தளபதி அண்ணா அவர்கள், இந்த நாட்டு இளைஞர்களின் மனப்புலத்திலே விஞ்ஞானச் சிந்தனையை விதைத்து வளர்த்திட மிக மிக வேட்கை கொண்டிருந்தார்கள்.

புதுமைப் படைப்புகளைப் பற்றிய செய்திகள் ஏடுகளில் வரும்பொழுதெல்லாம் அவர் அடைந்த புல்லரிப்புக்கு— பூரிப்புக்கு — எல்லையே இருந்ததில்லை.

நிலவை நெருங்குவதற்கு முதற்படியாகச் சோவியத் நாட்டைச் சார்ந்த விண்வெளி வீரர் ககாரின் வான மண்டலத்தில் வலம் வந்த செய்தியறிந்ததும் தேனுண்ட வண்டாக அவர் எப்படியெல்லாம் இன்பத்திலே திளைத்தார் — தம்முடைய அருமைத் தம்பிகளிடமெல்லாம் அந்தச் சாதனை பற்றியே எப்படியெல்லாம் உரையாடிக் களித்தவர் — என்பனவற்றையெல்லாம் அருகில் அன்று இருந்தவர்களிடமிருந்து அறியும் பொழுது அந்த அறிவுப் புதையலின் விரிந்த விஞ்ஞானக் கண்ணோட்டத்தை நம்மால் விளங்கிக்கொள்ள முடிகிறது.

ககாரினின் முதற் கட்டச் சாதனையைக் கேட்டே இன்பப் பொய்கையில் மூழ்கியவர்—

நிலவிலே மனிதன் அடிவைத்துவிட்ட அந்த நிகழ்ச்சியையும் கேட்க நேர்ந்திருந்தால் இன்னும் எவ்வாறெல்லாம் மகிழ்ச்சிக் கடலிலே நீராடியிருப்பார்?

ஆனால், 1969 ஜூலைத் திங்கள் — இருபத்தொன்றாம் நாள் — அமெரிக்க வீரர் நெயில் ஆம்ஸ்ட்ராங் முதன் முதலில் நிலவில் அடிவைத்த நேரத்தில் நம் அண்ணன் இல்லையே என நினைக்கும் பொழுது நம் கண்கள் குளமாகின்றன.

அவர் தம் பிறந்த நாள் கொண்டாடப்படுகிற இந்த வேளையில் — அவருக்கிருந்த விஞ்ஞானக் கண்ணோட்டத்தையும் எண்ணிப் பார்த்து மனத்தில் பதிய வைக்க வேண்டியது எல்லோருடைய கடமையும் ஆகும்.

இன்றைக்குக் குமிழை — —ஸ்விட்சைத் தட்டியவுடனேயே 'பட்'டென்று எரிகிறது மின் விளக்கு, சுழல்கிறது மின் விசிறி

ஆனால் அந்த மின் இணைப்பைக் கண்டு பிடிப்பதற்குள் மைக்கேல் பாரடேயும், ஹம்ப்ரே டேவியும் பட்டிருக்

கும் பாடுகள் கொஞ்ச நஞ்சமா?

அவர்களைப் போன்ற மேனாட்டு விஞ்ஞானிகள் தங்கள் படைப்புகளுக்காக அடைய நேர்ந்த அவலங்களை—ஆற்றொணாத் துயரங்களை—மிக நன்றாக அளந்து கூறியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அவர் காட்டுகின்ற ஒரு படப்பிடிப்பைப் பாருங்கள்:

''எவ்வளவு சிந்தனை? எத்தனை இரவுகள் கண் விழிப்பு, எதிர்ப்பைப் பார்க்காமல் — கேலி, கண்டனங்களைப் பொருட்படுத்தாமல்- ஆபத்துக்கு அஞ்சாமல் — மூளை குழம்புமே, கண் குருடாகுமே என்று யோசிக்காமல் — இன்னல்களை ஏற்று விஞ்ஞானச் சாதனங்களைக் கண்டுபிடித்தவர்கள் எல்லாரும் மேல் நாட்டார்கள்! எனவேதான், அவர்களுக்கு அதன் அருமை தெரிகிறது. அதனிடம் அதிக மதிப்பு வைத்திருக்கிறார்கள்''.

— அண்ணா அவர்களின் இந்த எண்ணச் சிதறலிலிருந்து அந்த மாமேதைக்கிருந்த இன்னொரு மனக்குறையும் வெளிப்படுகின்றது.

மேலை நாட்டவர்களுக்கிருந்த விஞ்ஞான வேட்கையும் வினைத்திறனும் கீழை நாட்டவர்க்கு — இல்லாமற் போய்விட்டனவே என்பதுதான் அவர் கொண்டிருந்த மனக்குறை.

அந்த மனக் குறையையும் அடியிற் காணும் வரிகளால் அவர் ஓவியமாக்கிடத் தவறவில்லை.

''விஞ்ஞானம் இந்த நாட்டில் விழலுக்கிறைத்த நீராகி விட்டது; பாலைவனத்தில் வீசிய பனிக்கட்டி போல— குருடனிடம் காட்டிய முத்து மாலையைப் போல — செவிடன் கேட்ட சங்கீதம் போல — விஞ்ஞானம் மதிப்பற்று இருக்கிறது.''

இவ்வாறு மதிப்பிழந்து கிடக்கும் விஞ்ஞான மனப்பான்மையை அவர் அடியிற் கண்டவாறு நகைச்சுவையோடும் சாடுகிறார்:

'விதை யொன்று போட்டால் சுரை ஒன்று முளைக்குமா?' என்று கேட்பார்கள். ஆனால் நாம் கற்கின்ற பல்வேறு துறைப் பாடங்களும் பயன் ஏதும் • அளிக்காமல் எங்கோ திசைமாறிப் போய் விட்டனவே என்கிற இதயக் குமுறலும் இந்த நகைச்சுவைச் சாடலில் நன்கு மிளிர்வதைக் காணலாம்.

''நமது பூகோள அறிவு — பதினான்கு லோகத்தைக் காட்டிற்று அந்த நாட்களில். நமது மார்க்க (சமய) அறிவு —நரபலியைக் கூடத் தேவை என்று கூறிற்று அந்த நாட்களில். நமது சரித்திர அறிவு பதினாயிரம் ஆண்டு ஒரு மன்னன் ஆண்டதாகக் கூறி வைத்தது. நமது பெண்ணுரிமையைப் பற்றிய அறிவு — காமக்கிழத்தியின் வீட்டுக்கு நாயகனைக் கூடையில் வைத்துத் தூக்கிச் சென்ற பத்தினியைப் பற்றி அறிவித்தது. நமது விஞ்ஞான அறிவு — நெருப்பிலே ஆறும் அதன் மீது ரோமத்தால் பாலமும் இருப்பதாக அறிவித்தது.''

கோடிக்கணக்கான ரூபாய்கள் கொட்டப்படுகின்றன கல்வி வளர்ச்சிக்காக.

ஆயினும் ஒழி ஒளியவில்லை — ஒழியவில்லை மூட நம்பிக்கைகள்.

அத்தகைய இருண்ட நிலை இருக்கலாமா என்று அண்ணா அடிச்சுவட்டில் நடந்து நாம் குரல் எழுப்பினால், பிற்போக்கு மதியினருக்கோ பீறிட்டுக்கொண்டு வருகிறது ஆத்திரம்! அறிவுக்குப் பொருந்தாத விளக்கங்களை அளிப்பார்கள்; ஆண்டவன் பெயரையும் துணைக்கு அழைத்துக்கொள்வார்கள்.

அறிவாராய்ச்சிக்குச் சாணை தீட்டுவதில் ஆமைப் போக்கு அறவே கூடாதுஎன்று உறுதியாக நம்பினார் அண்ணா.

அதனையே இந்த வரிகளில் அவர் எதிரொலிக்கிறார்:

''புண்ணுக்குப் புனுகு பூசி மறைப்பது போல, சத்தும் சாரமும் அற்ற எண்ணங்களையும் ஏற்பாடுகளையும்புலமைப்பூச்சினால், வைதீக வேதாந்தப் 'பிரவசனத்தால்' (சொற்பொழிவில்) பூசி மெழுகினால் மட்டும் போதுமா? புண் ஆறிடுமா? புதுமை பூத்திடுமா? பொலிவு மீண்டிடுமா? எண்ணிப் பாருங்கள்!

விஞ்ஞானம் தந்த புகை வண்டியிலும் காரிலும் ஏறிச்சென்று—

விஞ்ஞானம் தந்த ஒலி பெருக்கிக் கருவி முன்னே உட்கார்ந்து கொண்டு—

விஞ்ஞானம் தந்த மின்சாரக் குழல் விளக்கு வெளிச்சத்தில்தங்கள்வெற்றுடம்பை மின்ன வைத்துக்கொண்டு—

விண்வெளி ஆராய்ச்சியை — செவ்வாய்க் கோளத்தை நோக்கி நடைபெறும்

விண்கலப் பயணத்தைக் கிண்டல் செய்கின்ற சமயச் சொற்பொழிவாளர்கள் திரும்பத் திரும்ப எண்ணிப் பார்க்கவேண்டிய வரிகள் அல்லவா அண்ணாவின் இந்த எண்ணக்கனிகள்?

விஞ்ஞானப் புதுமைகளை விளைவித்து அறுவடை செய்யும் ஆற்றல் மற்ற நாட்டினருக்கு மட்டுமே தனி உரிமைச் சொத்தா?

நம் நாட்டினரும் முயன்று செயலாற்றினால் அந்த முற்போக்கு நிலையை — முதல் நிலையை அடையமுடியாதா?

'முடியும்' என்கிற தன்னம்பிக்கையையும் ஊட்டிடத் தவறவில்லை அண்ணா.

''அலைகடலைக் கடக்கும் மரக்கலம் அமைத்தோர்— ஆழ்கடலுக்குள்ளே செல்லும் கலம் அமைத்தோர் — விண்ணில் பறக்கும் விமானம் அமைத்தோர் — தொலைவில் உள்ளதைக் கேட்கவும் காணவும் கருவிகளைக் கண்டுபிடித்தோர் — காட்டாறுகளைக் கட்டுக்குக் கொண்டு வந்தோர் — நீரிலே நெருப்பின் சக்தியைக் கண்டறிந்தோர் — அனைவரும் நம்போல் மனிதரே! அவர்களால் முடிந்தது நம்மால் ஆகும் என்ற நினைப்பு நல்லதொரு ஊக்குவிக்கும் சக்தியாகும்!''

சிலர் வழுக்களை — பிழைகளை — வண்டி வண்டியாகச் சுட்டிக் காட்டுவார்கள்; ஆனால் வழிதுறைகளை — வகுத்துக்கொள்ள வேண்டிய திட்டங்களைப் பற்றி எள்ளளவும் எடுத்துரைக்க மாட்டார்கள்.

ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்களோ — வீழ்ச்சியுற்ற விஞ்ஞானச் சிந்தனை எழுச்சி பெறத் தக்க எண்ணங்களையும் எடுத்துரைக்காமல் செல்லவில்லை.

''பாடத் திட்டத்தில் பகுத்தறிவைப் புகுத்தினால் தான் மக்களுக்குப் பழைமையினிடத்தில் உள்ள பாசம் குறையும்; மனத்திலுள்ள மாசு நீங்கும்; காலத்திற்குத் தக்கதுபோல் கருத்து வளரும், அப்பொழுது மக்கள் உணவுப் பஞ்சத்தால் மடியும்பொழுது 'சாந்தி பருவ' ஆராய்ச்சி நடக்காது; மழையைப் பற்றிய ஆராய்ச்சி நடக்கும். சொற்பக்காலத்தில் விளையக்கூடிய பயிர் பற்றிய ஆராய்ச்சி நடக்கும்.''

இவ்வாறு மாணவர்தம் பிஞ்சு நெஞ்சத்திலேயே பகுத்தறிவை விதைக்கக் கூறிய அண்ணா—

அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவரிடையே பட்டமளிப்பு விழா உரையாற்றியபோது எத்துணைப் புரட்சியாளராக மாறிச் சிந்தனைக் கனலைக் கொழுந்துவிடச் செய்திருக்கிறார் தெரியுமா?

''சாதி பேதங்களைச் சாடுங்கள் — அவை சனநாயக மரபுகளுக்குச் சற்றேனும் பொருத்தமற்றவை என்பதால்! மூட நம்பிக்கைகள் அனைத்தையும் மண்மூடிப் போகச் செய்யுங்கள்—அவை விஞ்ஞான யுகத்துக்குக் கிஞ்சிற்றும் ஒவ்வாதன என்பதால்!''

பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த நாட்டிலே விஞ்ஞான மனப்பான்மை வேரூன்றித் தழைத்திட — வியத்தகு நன்மைகளையெல்லாம் விளைவித்திட — எவ்வளவு ஆழமான ஆர்வமும் அக்கறையும் கொண்டிருந்திருக்கிறார்!

அவருடைய பிறந்த நாள் இன்று!

அவருடைய நிகரற்ற அறிவை — ஆற்றலை நினைந்து நினைந்து மகிழ்ச்சியால் நெஞ்சம் நிறைந்திடும் நாள் இன்று!

இதே நாளில் —

அவர்தம் விஞ்ஞானக் கண்ணோட்டம் வெற்றிக் கனிகளைப் பெற்றுத் தரும் வண்ணம் நம் சிந்தனைப் பயணத்தை விரிவாக்கிச் செயலாற்றிட உறுதி பூணுவோமாக.



# உருக்குலையும் மனிதன்

...வாழ்விற்காக—வசதி தேடுவதற்காக உழைத்து, அந்த உழைப்பினாலேயே உருக்குலைந்து போகும் நிலை மனிதனுக்கு ஏற்படுமானால் அவன், 'முட்டை யிட்டதும் செத்துவிடும் கோழி; அரும்பு விட்டதும் பட்டுப்போகும் செடி' போல பயன் காணாமலும் பயன் தராமலும் போய்விடுகிறான்.

அறிஞர் அண்ணா

# மன வளம்

மலை கண்டு, நதி கண்டு மாநிதி கண்டு அல்ல ஒரு நாட்டை உலகம் மதிப்பது; அந்த நாட்டு மக்களின் மனவளத்தைக் கண்டேயாகும்!

பேரறிஞர் அண்ணா

அறிஞர் அண்ணா



# சிங்களச் சீமாட்டி

அறிஞர் அண்ணா அவர்கள் மற்றவர்கள் தொட அஞ்சிய சமுதாயப் பிரச்சினைகளை பற்றியெல்லாம் விரிவாகத் தொட்டு விளக்கமாக எழுதினர். பல்துறை எழுத்தாளராகிய அண்ணா எதை எழுதினாலும் ஒடுக்கப்பட்டவர்களின் சார்பாகவே நின்று எழுதினர். இந்தமலரில் அண்ணாவின் சிறுகதை ஒன்றினை இடம்பெற செய்திருக்கிறோம்.

"நாகரிக நாட்கள் என நீ கூறுகிறாய் பெண்ணே; இன்றும்கூட, நடையிலே — உடையிலே நாகரிகத்தைக் காண்கின்றேமே தவிர, எண்ணத்தில் பழைய விஷம் இருந்தபடிதான் இருக்கிறது உன்னை வலை போட்டு பிடிக்க விரும்பும் சொகுசுக்கார சங்கரன்கூட நாகரிக நாயகனை நடிக்கிறனே தவிர உள்ளத்தில் பழைய எண்ணம் நிரம்பித்தான் இருக்கிறது என்று நினைக்கிறேன்" என்று மங்கம்மாள் கூறினள்.

மலர்க்கொடி நகைத்தாள் அவள் சிரித்தபோதுதான் தெரிந்தது — 'பற்கள் எப்படி இருந்தால் பாவையருக்கு அழகு தரும்' என்பது!

சிவந்த இரு அதரங்களையும் கொண்டு மலர்க்கொடி தனது முத்துப் பற்களை மூடி வைத்தாள்; உண்மைதானே — விலையுயர்ந்த பொருள்களைக் கொஞ்சம் பாதுகாப்பாக வைத்துக்கொண்டு தானே இருக்கவேண்டும்? வைர மோதிரத்தை வெல்வெட்டுப் பெட்டியிலும், வரகு அரிசியை வாசலிலும் தானே போட்டு வைப்பார்கள்?

மலர்க்கொடியின் அங்கங்கள் ஒவ்வொன்றும், வம்புச் சண்டை போட்டபடி இருந்தன!

கண் சொல்லிற்று — 'நான் எவ்வளவு அழகாக இருக்கிறேன், பார்; கடல் அலையைப் போல் நான் பாய்வதை நோக்கு; அந்த மோகன மிரட்சியைக்காணு' என்று!

புருவங்களோ, சும்மா இரு — கண்ணே; நான், மதனன் வில்போல் வளைந்திருக்கும் காட்சியன்றே உன் அழகை எடுத்துக் காட்டுகிறது நானில்லாவிட்டால் நீ எங்கே? தங்கப் பெட்டிக்கு தகதகப்பு — வைரத்திலே உள்ள ஒளி; அதைப் போல கண்ணின் வனப்புக்கு நானன்றே காரணம்?" என்று சொல்லிற்று!

நெற்றி சும்மா இருந்ததா — அது 'பரந்து பளபளத்து பேழை என இல்லாவிடில் இந்தப் புருவமோ — கண்களோ எங்கு தங்கும்?" என்று வினவிற்று!

"என்னைக் கண்டு காதகரும் காமுறும் அளவு உள்ளேன்; நானின்றி நல்ல கண்ணே — புருவமோ — நெற்றியோ, ஏது?" என்று கன்னங்கள் கொஞ்சின!

"மன்னனுக்கு முடிபோல — மாலைக்கு மணம்போல — நான் இருக்கும் வனப்பு என்ன என்பதைப் பாருங்கள்" என்று கூந்தல் கூவிற்று!

இப்படி ஒவ்வோர் அங்கமும், ஒன்றையொன்று வம்புக்கிழுக்கும் அளவு வனப்புள்ள மங்கை—மலர்க்கொடி?

எனவே அவளால் மனத்துவம் — வாலிபத்துக்கும் நேரிட்ட போராட்டங்கள் இவ்வளவு அவ்வளவு அல்ல!

எத்தனையோ அதிகாரிகள் தமது பீடத்தில் அமர்ந்து — இந்தப் பெண்ணின் எண்ணியபடி தமது கடமையை மறந்ததுண்டு.

எத்தனையோ இளைஞர்கள், இவளன்றே வாழ்க்கையின் வழிகாட்டி — இன்பத்தின் இல்லம் — இவளன்றி நாம் ஏன் இருப்பது உலகில்?' என்று எண்ணி ஏங்கியதுண்டு!

மலர்க்கொடியின் மனம், பல்வேறு மாற்றங்களுக்குப் பிறகு சங்கரன் மீது சென்றது — நிலைத்தது; அவனையே மணப்பது' என்று முடிவு செய்தாள!

அவளுடைய எண்ணத்தை அறிந்ததும், அவன் துள்ளினன்; படிப்பு முடிந்து பரீட்சை தேறியதும் திருமணம்; எனவே, நாளை எண்ணிக் கொண்டு — எட்டைத் தள்ளிக்கொண்டும், என்று வரும் அந்நாள்' என்று மந்திரம் ஓதியபடி இருந்தான்!

மங்கம்மாளுக்கு நவநாகரிகத்திலே விருப்பம்; அதனுடைய மேற்பூச்சுகளில் மட்டுமல்ல — கருத்துக்களிலும் வேட்கை; தன் வாழ்க்கையிலே நாகரிகக் கோட்பாடுகளைப் புகுத்தி வாழ்ந்து வந்தவள்! மலர்க்கொடியும் அப்படியே!

சங்கரன், பார்வைக்கும்— பேசும்போதும் நாகரிக புருஷனாகவே காணப்பட்டான்; ஆனால்; 'உள்ளத்திலே வைதிகம் குடிகொண்டிருக்கிறது' என்பது மங்கம்மாள் கருத்து; அதனையே தன் மகளுக்கும் எடுத்துக் கூறினள்; மலர்க்கொடி அதனை நம்பாதது மட்டுமல்ல — நகைக்கவும் செய்தாள்!

"சிரிக்கிறாயோ? ஏனோ?" என்று மங்கம்மாள் கேட்டாள்.

"இல்லையம்மா; அவரைக்கூட சந்தேகிக்கிறாயே என்றுதான் சிரித்தேன், நேற்றுகூட அவர், தமது கல்லூரி மாணவர் சங்கத்தில், "மூட நம்பிக்கையும் முற்போக்கும்" என்பதைப் பற்றி மிகத் தீவிரமாகப் பேசினாராம்" என்றாள் மலர்க்கொடி!

பேசலாம்; அதை யாரம்மா இல்லை என்று சொன்னது? காரியத்திலே காட்ட வேண்டுமே—அதுதானே தேவை? உங்கள் பள்ளி வாத்தியாருக்குக்கிரகணம் எப்படி உண்டாகிறதுஎன்பது நன்றாகத் தெரியும்; அதை உங்களுக்குச் சொல்லியும் தருகிறார்; ஆனால் கிரகணத்தன்று அவர் எங்கே இருக்கிறார்?" என்று மங்கம்மாள் வினவினள்!

மலர்க்கொடி, "ஆமாம்; அர்த்தநாரீசுவர ஐயர், அவசியம் குளத்தங்கரைக்குத்தான் செல்வார் — மறக்க மாட்டார்" என்றாள்.

"அதைத்தான் சொல்லுகிறேன், நானும்" என்றாள் மங்கம்மாள்!

[2]

"பாழாய்ப்போன சூரியன், ஏன் இப்படிப் பாடுபடுத்துகிறனே தெரியவில்லையே? நெருப்பிலே போட்டு வாட்டுவதைப்போல வாட்டி விடுகிறன் — கால் கொப்பளித்து விடும்போல் இருக்கிறது" என்று காலை முதல் மாலை வரை கூறுபவரிடம், அதே சூரியன் மாலையிலே மறைகிற நேரத்திலே ஓர் அரை மணி நேரம் அளவு கடந்த புகழ்ச்சியைப் பெற்றுவிடுகிறன் அல்லவா?

வானத்திலே சூரியன் மறையும்போது கிளம்பும் அந்த செந்நிறம், எவ்வளவு சொகுசு! கண்களுக்கு அது தரும் குளிர்ச்சி எவ்வளவு! காவியக்காரரையும் — ஓவியக்காரரையும் அந்தக் காட்சி தூண்டிவிடுகிறது! காதலரும்கூட அவ்வேளையில் மகக் 'குஷாலராக' இருப்பதுண்டு!

"ஏண்டி மாரி — எடுத்துக்கோ கூடையை; அரிவாளைப் போட்டாயா; ஆகட்டும் — புறப்படு வீட்டுக்கு" என்று கெஞ்சினபடி குப்பன், மாரியுடன் களத்தை விட்டுப் புறப்படும் நேரம்!

"அதோ பார் — கோடியிலே; உன் அப்பா வருகிறார், சீக்கிரம் வரச் சொல்லிக் கூப்பிடு" என்று தனது குழந்தையைத் தபால் ஆபீசாக வைத்துக் கொண்டு—வேலையினின்று விடுபட்டு வீடு திரும்பும் கணவருடன் மாதர் கொஞ்சும் வேளை!


அந்த வேளையிலே, பங்களா தோட்டத்திலே, 'தம்பீ— ஏன் இந்த கிளாஸ்கோ பிஸ்கட்டு , பிடிக்கவில்லையோ உனக்கு' என்று மங்கம்மாள் கேட்க, அதுவரையில் மலர்க்கொடியின் கண்களிலே கோடிப் பொருளைக் கண்டு கண்டு களிப்படைந்துகொண்டிருந்த சங்கரன், "ஏன் பிடிக்காது—எனக்கு ரொம்ப விருப்பமாச்சே' என்று கூறியபடி ஸ்பூனைத் தவறுக எடுத்து வாய்க்கு அருகில் கொண்டுபோக — மலர்க்கொடி நகைக்க — மங்கம்மாள் புன்சிரிப்புக்கொள்ள — முகத்திலே அசடு தட்ட சங்கரன் வீற்றிருக்கும் காட்சி காணப்பட்டது! "மாலை நேரத்திலே தம்பீ— மனது குளிர்ந்து இருக்குமல்லவா?" என்றாள் மங்கம்மாள்!

"மனது குளிர்ந்ததோ இல்லையோ—உடல் குளிர்ந்தே போய்விட்டது" என்றாள் மலர்க்கொடி!

"ஆமாம்—ஆமாம்" என்று இரண்டிற்கும் பதிலளித்தான் சங்கரன்!

"நாளைக்கு நாம் மூவரும் நத்தம் ஜமீன்தாரின் விருந்துக்குப் போகவேண்டும்; மாலை ஐந்துமணிக்கெல்லாம் இங்கே வந்துவிடு; காரில் மூவருமாகப் போவோம்"

(தொடர்ச்சி 15—ம் பக்கம்)



# மனிதன்!

சூலூரிலிருந்து (கருவிலிருந்து) புறப்பட்டு, பாலூர் அன்னையின் அன்புப் பாலூட்டப் பெறுகிறோம். செல்லுகிறோம். பிறகு முறைப்படி வளர்ந்து வளர்ந்து வேலையூர் (தொழில் செய்தல்) செல்கிறோம். அங்கு பக்குவம்பெற்றபிறகு சேலையூர் (திருமணம்) சென்று இன்புறுகிறோம். பிறகு வசதியூர் தேடுவதிலே ஈடுபட்டு கடைசியில் சுடலையூர் சென்று அமைதி பெறுகிறோம.

—பேரறிஞர் அண்ணா

தம்பிக்கு கடிதம்

14ம் பக்கம் தொடர்ச்சி

என்று மங்கம்மாள் கூறினாள்:

'சரி' என்றான் சங்கரன்;

பிறகு மூவருமாகப் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டனர்; இரவு ஏழு மணிக்குக் கலைந்தனர்.

மறுதினம் மாலையில் குறிப்பிட்ட நேரத்தில் சங்கரன் வந்து சேர்ந்தான்; விருந்து நடக்கும் நத்தம் ஜமீன்தாரின் மாளிகைக்குச் சென்றனர்.

விருந்துக்குப் பல சீமான்களும் — சீமாட்டிகளும் வந்திருந்தனர்!

''நகை அணிந்திருக்கிறாளே — அந்த அம்மைதான் அகிலாண்டேஸ்வரி; அதோ சிரிக்கிறாள் பார்—பல்லிலே கொஞ்சம் தங்கமுலாம் கூட இருக்கிறதே — அவள் யார் தெரியுமா — அன்னம்மாள்; மணபுரி ஜமீன்தாரின் மருமகள்; அவள் கணவன் சீமைக்குப் போகிறான்; அதோ—அவர்தான் வைர வியாபாரி வரதராஜ செட்டியார்; அது சுபேதார் சுந்தரம்; இவர் டாக்டர் சுகுமாரன்'' என்று விருந்துக்கு வந்தவர்களையெல்லாம், மங்கம்மாள் தனது மருமகனாக வரவிருக்கும் சங்கரனுக்குக் காட்டினாள்!

வந்தவர்களும், இந்த மூவரையும் அறிந்து கொண்டு — உபசார மொழிகள் உரைத்தனர்!

விருந்து முடிந்து போகும்போது ஒரு நடுத்தர வயதுடையவர், மங்கம்மாளை அணுகி வந்தார்;

''சௌக்கியந்தானா சுந்தரம்—சௌந்தரவல்லி எப்படி இருக்கிறாள்?'' என்று மங்கம்மாள் கேட்டாள்;

''சுகந்தான் மங்கு! சௌந்திரம் இரங்கூனுக்குப் போனாள்; இன்னும் அங்கு நாடகம் நடக்கிறது—முடிந்து தானே வருவாள்?'' என்றான் சுந்தரம்.

''இதுதான் என் தங்கை புருஷன் சுந்தரம்'' என்று மங்கம்மாள் அவனை — சங்கரனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள்; சங்கரன் அவருடன் கை குலுக்கினான்;

மலர்க்கொடியை சுந்தரம் தட்டிக் கொடுத்து, 'ஏ, அப்பா—இவ்வளவு பெரிய பெண்ணாகிவிட்டாயா நீ' என்று கேலி செய்தார்;

சிறிது நேரம் சென்றதும், விருந்துக்கு வந்திருந்தவர்கள் வீடு திரும்பினர்; நமது கதாபாத்திரங்களும் தத்தமது வீடு சென்றனர்;

வீட்டிற்குப் போனதும் மங்கம்மாள், மலர்க்கொடியைப் பார்த்து, ஏ பெண்ணே — நாம் சௌந்திரத்தைப் பற்றிப் பேசும்போது, உன் சங்கரன் முகம் எப்படி இருந்தது கவனித்தாயா?'' என்று கேட்டாள்:

மலர்க்கொடி, ஒரு மாதிரியாகத்தான் இருந்தது'' என்றாள்;

மங்கம்மாள், போகப் போகத் தெரியும்' என்று கூறினாள்;

உள்ளபடி, சௌந்திரம் என்ற நாடகக்காரியின் அக்காள் மகள் மலர்க்கொடி' என்ற சேதி சங்கரனுக்கு விசாரத்தைத்தான் கிளப்பி விட்டது!

அவன் அதுவரை எண்ணிக் கொண்டிருந்தது — சிங்களச் சீமாட்டி மங்கம்மாளின் மகள் மலர்க்கொடி' என்பதே; அது ஒரு நாடகக்காரக் குடும்பம்' என்பது அவனுக்குத் தெரியாது!

''சிங்கள நாட்டிலே பல ஆண்டுகள் இருந்துவிட்டுச் சென்னைக்கு வந்த குடும்பம்' என்றும், அதிலே மணம் புரிந்துகொள்வது தனக்குப் பெருமை' என்றும் எண்ணினான் சங்கரன்; அன்றைய விருந்தின்போதுதான் அவனுக்கு விஷயம் தெரிந்தது!

''நாடகக்காரி சௌந்திரம்; அவள் தமக்கை மங்கம்மாள் — இவளும் ஒரு நாடகக்காரிதான்; இவள் மகளா மலர்க்கொடி? ஐயோ இவளை நான் மணம் புரிந்து கொள்வதா? நாடு நகைக்காதா? கூத்தாடிச் சிறுக்கியைக் கொங்குநாட்டு வேளாளக்குடி பிறந்த நானா மணப்பது? என் குடிப்பெருமை என்னாவது? '' என்று விசாரப்பட்டான் சங்கரன்! சாதி உணர்ச்சி அவனுக்கு அவ்வளவு இருந்தது!

[3]

சிங்களச் சீமாட்டி என்று பலராலும் அழைக்கப்பட்ட மங்கம்மாள், நல்ல நாயுடு வகுப்பு; சிறு வயதிலேயே விதவையாகிவிட்டாள்; பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும்போதே மங்கம்மாளுக்குப் பாட்டிலும் — நடிப்பிலும் அதிகப் பிரியம்; பள்ளிக்கூடத்தில் நடக்கும் எந்த விழாவிலும் மங்கம்மாதான் பாடவேண்டும்; மங்கம்மாவும் தங்கு தடையின்றிப் பாடுவாள்; வந்திருக்கும் பிரமுகரும் தட்டிக்கொடுத்துவிட்டு, 'சாரீரம் ரொம்ப ஜோர்; பாடும்போதே காது குளிருகிறது' என்று சொல்லாமல் போவதில்லை!

விதவையாகும் வரையிலே மங்கம்மாள் பாடுவது கிடையாது; 'பாட்டுப் பாடினால், பதி தன்னைப் பற்றி என்ன எண்ணுவாரோ' என்று அச்சம்!

விதவையான பிறகு, பிழைப்புக்கு வழியாகப் பாட்டுத்தான் அவளுக்கு உதவிற்று; அண்டை அயலார் வீட்டுக் குழந்தைகளுக்கு நலுங்குப் பாட்டு — சின்னச் சின்ன சிங்காரப் பாட்டு — தங்கமே தங்கம் முதலிய கும்மிப் பாட்டுக்கள் கற்றுக் கொடுத்து வந்தாள்;

ஒரு நாள், ஒரு வீட்டின் குழந்தைக்கு—

''திருவொற்றியூர் தேர்
வருகுது திரும்பிப் பாரடி —
கண்ணே திரும்பிப் பாரடி!
உன்மடியில் இருக்கும்
மக்காச் சோளத்தைத்
தின்னு பாரடி!''

என்ற பாட்டைக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்த சமயத்தில் — அந்த வீட்டுக்கு வந்திருந்த ஒருவர் — அந்தப் பாட்டைக் கேட்டுச் சொக்கிவிட்டார்; 'பலே பேஷ்' என்று கொண்டாடினார்.

பிறகு மெதுவாக மங்கம்மாளிடம் பேசத் தொடங்கி— இறுதியில் தமது நாடகக் கம்பெனியில் நடிகையாகச் சேர்த்துக்கொண்டார்;

மங்கம்மாளின் புகழ் மலேயா, சிங்கப்பூர் முழுவதும் பரவிற்று; 'பாட்டிலும் — நடிப்பிலும் இணையில்லை' என்று பெயரெடுத்தாள்!

மதன சுந்தரி — அது மங்கம்மாளின் நாடகப் பெயர். — பணமும் சேர்த்துக் கொண்டாள்; பணத்துடன் பிறந்ததுதான் மலர்க்கொடி!

இத்தனை சேதியும் சங்கரனுக்கு முதலில் தெரியாது; 'சிங்களநாட்டிலிருந்து விட்டுச் சென்னை திரும்பிய ஒரு பிரபல குடும்பம்' என்றுதான் அவன் முதலில் கேள்விப்பட்டான்;

சங்கரன், பெற்றோரை இழந்த ஒரு கொங்கு வேளாளப் பெருங்குடி; செல்வம் கொஞ்சம்; இருந்தாலும் தனது சாதி உயர்விலே அவனுக்கு மட்டற்ற நம்பிக்கை உண்டு!

அந்த உணர்ச்சி, உள்ளத்திலே எங்கேயோ தூங்கிக் கொண்டிருந்தது; அன்று விருந்திலே, 'மங்கம்மாள் ஒரு நாடகக்காரி' என்பது தெரிந்தவுடனே — அந்தச் சாதி உணர்ச்சி பொங்கி மேலிட்டு வெளிவந்தது!

[4]

''சேற்றிலே செந்தாமரை போல—இந்த மலர்க்கொடி— கடைசியில் ஒரு நாடகக்காரியின் மகளாகவா இருக்க வேண்டும்? என்னென்பேன் என் அதிர்ஷ்டத்தை? அந்தப் பேரழகியை நான் மணந்தால் ஊரார் என்னை நேரில் ஏதும் கூறுவிட்டாலும், மறைவாகவேனும், 'நாடகக்காரியைக் கல்யாணம் செய்துகொண்டவன்' என்று தானே தூற்றுவார்கள்? நான் எங்ஙனம் அதைக் கேட்டுச் சகிப்பேன்'' என்றெல்லாம் எண்ணி சங்கரன் விசாரப்பட்டான்;

மலர்க்கொடியின் அழகு — அவள் மீது அவன் கொண்ட காதல், 'சாதியாவது — பாழாவது சங்கரா; அவளை நீ நேசிக்கிறாய்—அவள் உன்னை நேசிக்கிறாள்— நல்ல ஜோடி; அவ்வளவுதானே கலியாணத்திலே கவனிக்கப்பட வேண்டிய விஷயம்' என்று சொல்லிற்று! ''சீச்சீ! கூத்தாடிப் பெண்ணையா மணப்பது? ஒரு மாடு வாங்குவதானாலும், எத்தனைக் குறிகள் பார்த்து வாங்குகிறோம்'' என்று நச்சரித்தது சாதி உணர்ச்சி!

எனவே சங்கரன், மலர்க்கொடியின் புகைப்படத்தைப் பார்ப்பதும் — சிந்திப்பதுமாக ஒரு வார காலம் தள்ளினான்; அந்த ஒரு வாரமும் அவனுடைய முகத்தைக் காணாமல் மலர்க்கொடி வாடினாள்.

மங்கம்மாள், ''என் பேச்சு சரியெனத் தோன்றுகிறதல்லவா குழந்தாய்; சங்கரன், எப்படி 'ஒரு டிராமாக்காரியின் பெண்ணை மணப்பது' என்று எண்ணுகிறான் பார்; அவனை விட்டதா — அந்தப் பழங்காலக் கொள்கை?'' என்று கூறினாள்.


''இவ்வளவுதானா? நான், 'நாடகக்காரியின் மகள்' என்ற காரணத்திற்காக என் மீது இவர் வைத்திருந்த காதல் எப்படி மாறுவது? என் தாய் நடனக்காரி என்பதால், எனது இலட்சணத்திலே எது மாறிவிட்டது? என் உள்ளத்திலே இவர் என்ன தவறு இருப்பதாகக் கருதுகிறார்? என்னே—சாதிப் பித்து?'' என்று எண்ணி ஏங்கினாள் மலர்க்கொடி!

தொடர்ச்சி 18-ம்பக்கம்

MOHAMAD IDRIS BROS.
KIBS
கிப்ஸ்
REGISTERED TRADE MARK
HANDLOOM TEXTILES
கிப்ஸ் மார்க்
கைத்தறி லுங்கிகள்
கைக்குட்டைகள்
ஆண்டுக்கோர் புதுமை அதுவே
கிப்ஸ் மார்க்கின் திறமை.
இவ்வாண்டின் இனிய படைப்புகள்
'ஷோலே' & 'சீனி பிரியா'
வண்ண டிசைன்கள்




தயாரிப்பாளர்கள்:
முகம்மது இதிரீஸ் பிரதர்ஸ்
63-64, அரண்மனைக்காரன் தெரு, சென்னை-600001
கிளைகள்: மதுரை, பம்பாய், கொல்லம், கல்கத்தா
CROWN MIB 155



தந்தையின் அன்புத்
தழுவலில் வளர்ந்த
சிந்தைக் கினியவர்
செந்தமிழ் அண்ணா'



கண்ணியத்துக் குரியவராம்
காயிதே மில்லத்தும்
கண்ணியத்தின் காவலராம்
காஞ்சித் தலைமகனும்!



மூதறிஞர் ராஜாஜி —
பேரறிஞர் அண்ணாவும்
தோதாகப் பேசியிங்கு
தொல்லையெலாம் தீர்த்திருந்தார்!



பசைசைத தமிழருடன்
பளிங்குமனம் கொண்டிருந்த
இச்சைத் தமிழ்த் தலைவர்
இனிய அண்ணா உரையாடல்!

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் விருப்பத்தை நிறைவேற்ற மாமல்லன் வீடு கட்டும் சங்கத்தின் இடத்திற்குச் சென்றோம். முதலில் கட்டப்பட்டிருந்த வீட்டின் முன் வண்டியை நிறுத்தி, அந்த வீட்டின் கேட்டைத் திறந்து உள்ளே சென்ற வண்ணம், அண்ணா அவர்கள், ''இது யாருடையது?' என்றுகேட்டார்.

''இது வி. பி. எஸ். அவர்களுடையது. கதவுகள் பூட்டப்பட்டுள்ளன'' என்றேன்.

அளவற்ற ஆசையோடு அந்த வீட்டை அண்ணா சுற்றிப் பார்த்தார். வி. பி. எஸ். அண்ணாவின் நண்பர்களில் ஒருவர். அண்ணாவின் அன்பைப் பெற்ற புட்டாசாமி அவர்கள், வி. பி. எஸ். என்று அண்ணாவால் அழைக்கப்பட்டவர்!

1949-ல் கழகம் தொடங்கப்பட்டபோது அண்ணாவின் பிரசித்தி பெற்ற 4758 எண்ணுள்ள இந்துஸ்தான் வண்டியை இரவு பகல்என்று பாராமல் தமிழ்நாடு முழுவதிலும் சுற்றிவரும் அளவில் அறிஞர் அண்ணாவுக்குத் துணையாகவும், உள்ளம் கவர்ந்த நண்பராகவும் கார் ஓட்டியவர் புட்டாசாமி.

அவரது புது மனை புகும் விழாவில் அண்ணா கலந்து கொள்வதற்காக நாள் கேட்ட வண்ணம் இருந்தார். அண்ணாவின் உடல் நலம் சரியாக' இல்லை; உடல் நலம் தேறும் நேரமாகப் பார்த்து நாள் கேட்டுப் பெறலாம்'. — என்று வாய்தா போட்டுக்கொண்டே வந்தேன். ஆனால் அவரோ — நானே அழையாமலே கூட அன்று அண்ணா-வந்து சுற்றிப் பார்க்கும் பேற்றினை அந்த வீடு பெற்றுவிட்டது!

''எவ்வளவு ரூபாய் செலவாயிற்று?'' என்றார் அண்ணா

''சங்கத்தின் திட்டப்படி இந்த வகை வீடுகளின் மதிப்பு ரூ. 35 000'' என்றேன்.

எதிர்ப்புறம் உள்ள மாடல் வீடு ஒன்றைக் காட்டி, 'அதன் மதிப்பு எவ்வளவு?' என்று கேட்டார். ரூ. 12,500 என்றேன்.

அதைப் போய்ப் பார்த்த பிறகு அண்ணா சொன்னார்: ''முப்பதாயிரம் ரூபாயில் வீடு கட்டுவோருக்கு சொசைட்டியிலிருந்து கடன் வாங்கித் தராதே. பனி ரெண்டாயிரம் ரூபாயில் வீடு கட்டும் நடுத்தர மக்களுக்கு — அதிக நபர்களுக்கு வாங்கித் தர முயற்சி-செய். முப்பதாயிரம் ரூபாயை ஒருவருக்கு வாங்கித் தருவதை விட அதனை மூன்றுபேருக்கு கொடுத்து மூன்று வீடுகள் கட்ட ஆவன செய். இதைத் தான் உன்னிடம் எதிர்பார்கிறேன்'' என்றார் அண்ணா.

13—10—1967-ல் அவரால் இதற்கு அடிக்கல் நாட்டப்பெற்று குறுகிய காலத்தில் அதிக வீடுகள் கட்டப்பட்டது பற்றியும் வாழ்த்தினார்.

''அண்ணா! மணி அதிகமாகிவிட்டது, வீடு திரும்புவோம்!'' என்றார் இரா. செழியன்.

புறப்பட்டோம்; வீடு வந்தோம். அதிகாரிகளும் நண்பர்களும் காத்திருந்தனர்.

அண்ணா வண்டியை விட்டு இறங்கி அனைவரையும் பார்த்து வணங்கிய வண்ணம் வீட்டுக்குள் நுழைந்து நேரே படுக்கை அறைக்குச் சென்று படுத்துக் கொண்டு ''அனைவரையும் காலையில் வரச் சொல் மணி! எனக்குச் சோர்வாக இருக்கிறது!'' என்றார்.

அவருடைய எண்ணத்தை வந்தவர்களிடம் கூறி அனைவரையும் அனுப்பி விட்டு உள்ளே வந்து உட்கார்ந்தேன்.

முன் தினம் சென்னையிலிருந்து தாம் வர இயலாத நிலையில் பேத்திக்குச் சில வளையல்களும் ஒரு மோதிரமும் என்மூலம் அனுப்பி வைத்த அண்ணாவின் வேதனையைக் கண்டு துக்கம் தாங்காமல்அழுத்து என்நெஞ்சம், இப்போது அவர் காஞ்சிக்கு வந்திருப்பதும் சோர்வுடன் இருப்பதும் என்னை மேலும் மிகமிகக் கலவரப்படுத்தியது.

புலவர் கோவிந்தன் அவர்களும், அவரது இளவல் டாக்டர் நடராசனும் அண்ணாவைக் காண வந்திருந்தனர்.

''அண்ணா படுத்து விட்டார். நாளைக் காலையில் தான் பார்க்க முடியும்' என்றேன். அவர்களுக்குப் பெரிய ஏமாற்றம். இருந்தாலும் புலவர் உடனே புறப்பட்டுவிடாமல் கொஞ்ச நேரம் — வாய்ப்புக் கிடைக்காதா — என்ற ஆவலுடன் காத்திருந்தார். அவர் காத்திருந்தது வீணாகவில்லை. அண்ணா எழுந்து வந்து ஈசிச்சேரில் உட்கார்ந்து, ''வா கோவிந்தா— எப்போது வந்தாய்?' என்று கேட்டுப் பதில் பெற்று, ''என்ன நடராசா சௌக்கியமா?'' என்றும் கேட்டார் டாக்டரைப் பார்த்து.

டாக்டர் அண்ணாவின் நிலையை உணர்ந்து ''ஓய்வும் மனத் தைரியமும்தான் அண்ணா தங்களுக்குத் தேவை'' என்றார்.

''ஓய்வா?'' என்று இழுத்தாற்போல் கூறிவிட்டு, ''தைரியத்திற்கு ஒன்றும் குறைவு இல்லை. சாப்பிடத் தான் முடியவில்லை'' என்று சொல்லிக்கொண்டே அறுவைச் சிகிச்சைபற்றிக் கேட்டார்.

டாக்டர் தமக்கு ஏற்பட்ட அறுவைச் சிகிச்சையைப் பற்றிக் கூறினார்.

அதைக் கேட்ட அண்ணா, ''அப்படியா? இவ்வளவு பெரிய ஆபரேஷன் செய்து கொண்டாயா?'' என்றார்.

டாக்டர். நடராசன் தாம் அணிந்திருந்த சட்டையைக் கழற்றிப் பின்புறத்திலிருந்து மார்பு வரையில் அறுக்கப்பட்டுத் தைக்கப்பட்டிருப்பதைக் காட்டி. ''இப்போது நான் நலமாக இருக்கிறேன் அண்ணா. தாங்களும் செய்துகொண்டால் நலமாக இருக்க முடியும். ஓய்வும் மன வலிவும் தான் இப்போது தேவை'' என்றார்.

அண்ணா அவர்கள் சலிப்புடன், ''இச்''சுக் கொட்டியவாறு என்னைப் பார்த்து, ''போய்ச் சாப்பிடு; பகலே நீ இங்கு சாப்பிடவில்லை!'' என்று உத்தரவிட்டார். அத்துடன் காலை எட்டுமணிக்கெல்லாம் சென்னை புறப்பட வேண்டும் என்றும் ஏழு மணிக்கே வந்துவிடுமாறும் சொன்னார்.

இரவு பத்து மணி இருக்கும்.

புலவரும், டாக்டரும் சென்றார்கள். நான் என்னுடைய வீடு வந்து சேர்ந்தேன். மனம் ஒரு நிலையில் இல்லை:

மறுநாள் காலை 7 மணி அளவில் அண்ணாவின் இல்லம் சென்று அவரது படுக்கை அறைக்குப் போய்ப் பார்த்தேன். தூங்குவது போல் தெரிந்தது. வெளியே வந்து விட்டேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர் 7.45-க்கு வந்துவிட்டார். 8—30 மணிக்கு மீண்டும் படுக்கை அறைக்குப் போனேன். அண்ணா கண் விழித்துப் பார்த்து, ''முன்னமே நீ வந்தது தெரியும். மணி. கொஞ்ச நேரம் போகட்டும் எழுந்திருக்கிறேன். இராணியைத் தயாராக இருக்கச் சொல் புறப்பட்டு விடலாம்.'' என்றார்.

அண்ணியாரிடம் கூறி அவர்களைத் தயாராக இருக்கச் சொன்னேன். ஆனால் அண்ணா எழுந்து வரவில்லை. நேரம போய்க் கொண்டே இருந்தது!

10.45 மணிக்கு எழுந்தார். ஐந்தே நிமிடத்தில் சட்டை வேட்டி மாற்றிக் கொண்டு பாப்பாப்பு (அன்னை) விஜயா, இளங்கோவன், அக்காள், கண்மணி (பேத்தி) ஆகியோரிடம் விடை பெற்றுக் கொண்டு வெளியே நின்றிருந்த என்னை, ''சற்று வெளியே இரு மணி. மற்றவர்களையும் அங்கே இருக்கச் சொல்!'' என்று கூறிச் சென்றார்.

அவர் ஆணையை ஏற்றுச் செயல் பட்டேன். ஆனால் இந்த இருபதாண்டுக் காலப் பழக்கத்தில் குடும்பத்தில் என்னை வெளியே இருக்கச் சொல்லி அண்ணா பேசியது கிடையாது! இது எனக்குப் புதிதாகவும், ஏதோ ஒருவகைக் கிலேசத்தை ஊட்டுவதாகவும் இருந்தது.

ஐந்து நிமிடத்தில் வெளியே வந்து அனைவருக்கும் வணக்கம் கூறியவாறு காரில் ஏறிக் கொண்டார் அண்ணா. அண்ணாவுடன் அண்ணியாரும் காம்பவுண்டரும் உடனிருந்தனர்.

''வருகிறேன் மணி.'' என்றார் அவர்.

கார் புறப்பட்டது.

புறப்பட்ட கார் மறுபடியும் காஞ்சிபுரம் வந்தது! ஆனால் அந்தக் காரில் என் அன்புத் தெய்வம்,— தமிழ் அன்னையின் தலைமகன் — தானைத் தலைவன்— என்னைப் போன்றோரின் வாழ்க்கையோடு கலந்து வழிகாட்டிய பேரறிஞர். அண்ணா இல்லை. அவர் அதன் பின்பு காஞ்சிபுரத்துக்கு வர இயலாதபடி காலம் அவரைக் கொண்டு விட்டது.

தமிழ்நாடு சிறக்கப் பல திட்டங்கள் வகுத்தாலும் தான் பிறந்த மண்ணை காஞ்சிபுரத்தைக் கண் குளிரப் பார்க்க அவர் ஏன் திட்டமிட்டார் என்பது அந்த பொங்கல் நான்று எங்களில் யாருக்குமே விளங்கவில்லை!

—(நன்றி : 'கழகக் குரல்: தி.மு.க. 5-வது பொதுமாநாட்டு மலர் 1975)

★

# தோகைச் சூரியன்...!

எத்தனையோ பேருலகில் பிறக்க லானர்
இருந்தாலும் உன்னைப்போல் எவர்பி றந்தார்?
முத்தமிழைக் கோலமிடும் கல்விக் கண்கள்
முதுமொழியைப் பதப்படுத்தி வழங்கும் நாவே?
அத்தனைக்கும் மேலாக மேடைப் பேச்சில்
அகவற்பா நடையழகு; தென்றல் — திங்கள்
குத்தகைக்குன் சொல்வாங்கிப் பங்கு போட்டு
குளிர் சுகத்தை என்றென்றும் பொழிவ துண்டு.

பூவிதழைப் புறமொதுக்கி தேனை உண்டு
புதுராகக் கச்சேரி நடத்தும் வண்டு
பாவிதழை நீவிரித்தே இன்பம் கொண்டு
பழமையிலே புதுமை சொலும் பாவலன் நீ!
காவிரி நீர் காற்றுக்குப் பண்ணை நல்கும்
கனிந்தமர மானவன்நீ — உலகுக் கெல்லாம்!
ஆவினது குரல் கேட்ட கன்றைப் போல
அண்ணா! உன் சொல் கேட் டால் 'அண்ணா' என்போம்!



வையத்தே ஆடம்பர மின்றி வாழ்ந்தோம்!
வருங்கால நலம் உயர வழி வகுத்தோம்.
கைத்தறியை உடுத்துபவன் அழகு சேர்க்க
கண்ணாடிசீப் புனக்குத் தேவை இல்லை!
கைவிரல்கள் சீப்பாகும் தலையை வாற!
கடமை யெனும் கண்ணாடிமுன்னால் நின்று
மெய்வருத்தி உழைத்ததிலே அழகைக் காண்போம்
மெல்லினத்தில் இடையினத்தில் பற்று வைத்தோன்.

பாடிவந்த பாதையிலே உன்றன் கால்கள்
பதித்திட்ட முத்திரைகள் இந்த நாட்டின்
நீடுதுயில் போங்கதையை வளர்க்கும் நாங்கள்
நின்பேச்சு முகில் வரவால் வறுமை என்னும்
சூடகற்றி ஆடுமயில் ஆகத் தோகைச்
சூரியனாய் நீ விளங்கி அழகு செய்தோன்!
ஏடுபயில் வோர்க் கெல்லாம் மனம்வி ழிக்க
எடுத்துரைத்த வள்ளுவனின் முப்பா லானேன்.

உன்நாக்கு போட்டபிச்சை எழுது கோலால்
உழுவோர்க்கும் வித்தாகும் இந்த நாட்டை!
பொன்னுக்கும் புதுமையிலே மூழ்க டிக்கும்
பொய்வளர்க்கும் புலவர்க்கும் விளக்கே ஆகும்
முன்னேக்கும் கொள்கையிலே சாதி பேத
முகத்திரையைக் கிழிக்கவுன்றன் பேனா பாய்ந்து
மின் தாக்கும் தாக்கைப்போல் விரைந்து தாக்கும்
மீன்கொடியோர் வளர்த்ததமிழ்த் தலைவா! வாழ்க!



ஓடைப்பட்டி சுப்பையா

(15—ம் பக்கத் தொடர்ச்சி )

ஜிலு ஜிலுவென்ற காற்றும் — சிறு தூறலும் இருந்தால்தானே பூஞ்சோலை பூத்து நிற்கும்? அதைப்போல காதலில் சிக்குண்டவர் — முன்பு காதலை ஊட்டியவர் — நின்று பேசினால்தானே அவர்களுக்கு இன்பம்?

சங்கரனே — மலர்க்கொடியின் மாளிகைக்கு வருவதில்லை! மலர்க்கொடியோ — வாடி வதைந்தாள்' பாவம்!

சங்கரனுக்கு வருத்தம்தான்! ஆனால் அவன் அதனை தீர்த்துக்கொள்ள வேறு மார்க்கத்தைத் தேடினான்; நண்பர்களிடம் சென்று முறையிட்டான்.

அவர்களிலே சிலர், 'ஒரு டிராமாக்காரிக்காக ஏனப்பா இப்படி ஏங்குகிறாய்—சும்மா ஒரு பச்சை நோட்டை வீசினால் காரியம் - முடிகிறது; இதை விட்டு என்னமோ ஏங்குகிறாயே'— என்றும், 'என்னடா— பித்தனாக இருக்கிறாய்; ஆகட்டும்— கலியாணம் செய்துகொள்கிறேன் என்று சொல்லேன்; காரியம் முடியட்டுமே; பிறகு பார்த்துக்கொண்டால் போகிறது' என்றும், 'பைத்தியக்காரப் பேர்வழி; இத்தனை நாளாக ஒரு 'சான்ஸ்' கூட அகப்படவில்லையா?' என்றும் சொன்னார்களே ஒழிய, ஒருவராவது, 'நீ காதலிக்கும் மங்கையை மணக்கச் சாதி ஏன் குறுக்கிடுவது?' என்ற உண்மையைக் கூறவில்லை.

இன்பம் வேண்டும்—ஆனால் அதைப் பெற இடர் மட்டும் வரக்கூடாது!

போகம் வேண்டும்—ஆக 'பொறுப்பு இருக்கலாகாது' என்ற எண்ணம் அந்த இளைஞர்களுக்கெல்லாம்!

'மணம் செய்து கொண்டால்தானே ஊரார் ஏசுவார்கள்; கூத்தி என்று கொண்டால் என்ன சொல்லப் போகிறார்கள் — 'என்னமோ பிள்ளையாண்டான்; சற்று துடியான ஆள்; அவள் வலையிலே விழுந்துவிட்டான் இது சகஜந்தானே; அவனும் சந்நியாசி அல்ல — அவளும் பத்தினியல்ல' என்று சொல்லுவார்கள்; 'அவள் வேறு சாதியாச்சே — இவன் வேறு சாதியாச்சே; அவளை இவன் கூடுவதா' என்று கவலைப் படமாட்டார்கள்; அது சகஜமானதாகிவிட்டது; ஆனால் அதே மங்கையைக் கல்யாணம் செய்து கொண்டால் மட்டும், 'ஐயோ' எனப் பதைப்பார்கள்; 'ஆகுமா' என்று அலறுவார்கள்; 'அது என்ன கோலம்' என்று கேட்பார்கள்; உலகத்தின் போக்கு இது!

[5]

மெள்ள மெள்ள சங்கரனின் உள்ளத்திலே கள்ளத்தனமான எண்ணங்கள் எழத் தொடங்கின!

சாதீய உணர்ச்சி அவனை, "மலர்க்கொடியை மணக்கக் கூடாது; ஆனாலும், அவளை அடைய வேண்டும்' என்ற எண்ணத்தைத் தந்து விட்டது!

எனவே அவன், சாகசமாகத் தன் காரியத்தைச் சாதித்துக்கொள்ள வேண்டுமெனக் கருதினான்!

நல்ல காரியம் செய்வதென்றால் அவ்வளவு விரைவில் யோசனைகள் வருவதில்லை; கெட்ட காரியத்திற்கோ பற்பல யோசனைகள் வருவது உண்டு; எனவே சங்கரன், எப்படியோ மிகத் தாழ்ந்தவிதமான சூது செய்யவும் துணிந்து விட்டான்!

ஒருநாள் மாலை மலர்க்கொடியும் — மங்கம்மாளும் தோட்டத்திலே உலவிக் கொண்டிருக்கையில், ஓர் ஆள் அங்கு வந்து சங்கரன் தந்ததாக ஒரு கடிதம் தந்தான்; மலர்க்கொடி அதைப் பிரித்துப் படித்தாள்:

''அன்பே!

எனக்குத் திடீரென்று காய்ச்சல் வந்துவிட்டது; ஆகவே நான் அங்கு வர முடியவில்லை; இன்றிரவு எட்டு மணிக்கு தயவு செய்து என் அறைக்கு வர வேண்டும்; கண்ணே — உன்னைக் காணாது எனக்குப் பெரிதும் கவலையாக இருக்கிறது; தேவீ — உன் தரிசனத்தைக் கொடு; தவறாது வா; தவறக்கூடாது — தவறவே கூடாது.

இப்படிக்கு
உனது காதலன்
சங்கரன்

என்று எழுதப்பட்டிருந்தது; மலர்க்கொடி, கடிதத்தைத் தாயிடம் தந்தாள்.

மங்கம்மாள் படித்துவிட்டு, ''சரி — சூது செய்வான்; அவன் மனம் கெட்டுவிட்டது இனி நான் சொல்வதைப் போல நட மகளே; உன்னை சங்கரன் கெடுத்து விடுவான்; இங்கே வா' என்று கூறி, நெடுநேரம் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தாள்.

இரவு எட்டு மணிக்கு சங்கரன் அழைத்தபடி மலர்க்கொடி சென்றாள்; ஆனால் அவளுக்கு முன்பு இருந்த உற்சாகம் இல்லை; சங்கரனின் உண்மைச் சுபாவத்தைத் தெரிந்துகொள்வது என்ற யோசனையிலேயே அங்கு சென்றாள்.

சங்கரன் அவளுக்காகக் காத்துக் கொண்டிருந்தான்; மலர்க்கொடியைக் கண்டதும் நகைத்தான்; 'மயிலே, குயிலே — மானே, தேனே' எனக் கொஞ்சினான்!

மலர்க்கொடி பழையபடி சிரிக்கவில்லை — முன்பு போல் பேசவில்லை; இவ்வளவும் வெளி வேடந்தானே' என்று எண்ணும்போது, அவளுக்குத் துக்கம் பொங்கி எழுந்தது.

அதனை அடக்கிக்கொண்டு, மங்கை பேசினாள்—''உடம்பு காய்ச்சல் என்று எழுதினீர்களே! உள்ளத்திலேதானே காய்ச்சல் — உடம்பில் அல்லவே! சரி—உள்ளத்துக் காய்ச்சலுக்குக் காரணம் யாதோ?''

''உல்லாசி — உன்னால் வந்ததுதான்; வா இங்கே —என் பக்கத்தில் அமரு; ஒரு முத்தம் — ஒரே ஒரு முத்தம் கொடு பார்ப்போம்!''

''பலே சங்கர்; இவ்வளவு தூரம் வளர்ந்துவிட்டதா உமது சாகசம் — திடீர் வளர்ச்சியாக இருக்கிறதே!''

''காதலி — இதிலே சாகசமேது? உன்னைக் கண்டால் என் மனம் அவ்வளவு பூரிக்கிறது; ஒரு முத்தம் தாராயா? நான் யார் — உன் காதலன் அல்லவா?''

''நீர் யார் — ஒரு வேளாளர்; அழகுள்ள மங்கை எவளேனும் அகப்பட்டால் அவளைச் சேர எண்ணும் சொகுசுக்காரர்!''

''கோபமேன் பெண்ணே''

''கோபம் ஏன் — உள்ளபடி, ஒரு நாடகக்காரியின் மகள் கோபிக்கலாமா? அதிலும் ஒரு வேளாள இளைஞர்-படித்தவர் — 'முத்தம் கொடு' என்று கேட்பதே அவளுக்குப் பாக்கியமல்லவா — கிடைக்குமா? அவளுக்கு எவ்வளவு பெரிய பாக்கியம்?

''மலர்க்கொடி — நீ ஏன் ஏதோ சந்தேகம் கொண்டு பேசுகிறாய்? நீ நாடகக்காரியின் மகளானால் என்ன — உன்னைத்தானே நான் மணம் செய்துகொள்ளப் போகிறேன்? என் காதலியின் கரத்தைப் பிடித்திழுத்துக் கட்டில்மீது தூக்கிப் போட்டு முத்தமிட எனக்கு உரிமை இல்லையா? முடியாதா என்னால்?''

''முடியும் — நான் ஏமாந்தால்'' என்று சொல்லிக் கொண்டே மலர்க்கொடி சங்கரன் தாடையிலே அறைந்துவிட்டாள்!

அதே நேரத்தில், அவள் கண்களிலே நீர் ததும்பிற்று; மங்கம்மாளும் அந்த அறைக்குள் வந்தாள்.

''அம்மா — நான் ஏமாந்தேன்; இவனை நம்பினேன்— இவன் கடைசியில் என்னை வெறும் காமப் பொருளாகக் கருதுகிறான்; நீ சொன்னது முற்றிலும் உண்மை; என்னை இந்த இடத்தை விட்டு அழைத்துக்கொண்டு போய்விடு'' என்று அழுது தாயின் மார்பிலே சோர்ந்து சாய்ந்தாள்!

மங்கம்மாள் புன்னகையுடன், திகைத்து உட்கார்ந்து கொண்டிருந்த சங்கரனை உற்று நோக்கினாள்.

''சங்கரா — சாதியை நீ காப்பதுபோலத்தான்நானும் என் மகளைக் காப்பேன்; மலர்க்கொடியும் தன் மானத்தைக் காப்பாள்'' என்று கூறிவிட்டுத் தாயும் மகளும் அங்கிருந்து வெளியேறினர்.

சங்கரன் சோர்ந்து படுக்கையில் சாய்ந்தான்; நம் சாகசம் தோற்றதே — சாயம் வெளுத்ததே — மலர்க்கொடியை இழந்தோமே என்று ஏங்கினான்.

''சங்கர்; என்ன — என் யோசனைப்படி முடித்துவிட்டாயோ? மலர்க்கொடி வரும்போது நான் பார்த்தேனே?'' என்று சங்கரனுக்கு யோசனை கூறிய சதாசிவம் கேட்டான் — மறுநாள் காலை!

''முழுத் தோல்வி, அந்த மங்கா, என்னைப் பற்றி மலர்க்கொடியிடம் ஏதேதோ கூறிவிட்டாள்; இனி என்னால் அவளை அடைய முடியாது; கலியாணம் செய்துகொள்வதானாலும் நடக்காது; என் மீது அவர்களுக்கு அளவு கடந்த வெறுப்பு ஏற்பட்டுவிட்டது' என்றான் சங்கரன்.

'நான்சென்ஸ் அப்படித்தான் இருக்கும் முதலிலே; பாபம் — நீ கலியாணம் செய்துகொள்வாய் என்று நம்பினார்கள்; இப்போது தானே விஷயம் தெரிந்தது; அதனால்தான் ஆத்திரம் அவர்களுக்கு. போகப் போக தணிந்துவிடும்; நீ மட்டும் சற்று பிகுவாக இருக்க வேண்டும்; ஏதோ சோகமடைந்தவனைப்போல இருந்தால், அவர்கள் வழிக்கு வரமாட்டார்கள்'' என்றான் சதாசிவம்,

''நண்பா — எனக்கு ஒரு பயமிருக்கிறது; வேறு யாராவது மலர்க்கொடியை மணம் புரிந்து கொண்டால் என்ன செய்வது? பிறகு நான் என்னாவது?'' என்றான்.

''அதற்கெல்லாம் உரிய ஏற்பாடுகள் செய்கிறேன்; எழுந்திரு — வெளியே போய் சற்று ஜாலியாக இருப்போம்; உன் மனமும் சாந்தியடையும்; வா, போவோம்'' என்றழைத்தான் சதாசிவம்.

''எங்கே போவது?''

''ஜீவா வீட்டிற்கு''

''ஜீவாவா? யாரது?''

''வந்து பார்; உன் மலர்க்கொடி — கிலர்க்கொடியை எல்லாம் தூக்கித் தூரப் போட்டு விடுவாள், மந்திர சாமித் தெரு தாசி ஜீவா தெரியாதோ உனக்கு?''

''சீச்சீ — நான் வரமாட்டேன்; யாராவது கண்டால் ஏதாவது சொல்லுவார்கள்!

''சொன்னார்கள் — வா, போவோம்'' என்று வலிய சங்கரனை அவன் தோழன் தன் கூத்தி வீட்டுக்கு அழைத்துச் சென்றான்!

[6]

ஜீவா, ஜடை வாரிக் கொண்டிருந்தாள்; மேற்பூச்சு வேலைகள் இல்லை; இருந்தபோதிலும் பரவாயில்லை — கண்ணுக்குக் காட்சியாகத்தான் இருந்தாள்; ஆனாலும், அதனை உணர்ந்தவர் பலர் என்பது, ஜீவாவின் கன்னங்களிலே பளபளப்பு குறைந்ததிலிருந்தே தெரிந்துகொள்ளக்கூடும்!

''சங்கர் — இதோ பார் என் ஜீவாவை; மலர்க்கொடி — மலர்க்கொடி என்று அழுகிறாயே தம்பி — இதோ பாரப்பா. பார்'' என்றான் சதாசிவம்!

சங்கரனுக்குக் கொஞ்சம் வெறுப்பாகத்தான் இருந்தது — 'என்னடா இது — இவ்வளவு பச்சையாகப் பேசுகிறானே என்று; ஒரு மாதின் எதிரிலே, 'அவளை விட மற்றொருத்தி அழகு' என்று சொல்வதைப் போல ஆபத்து உண்டோ?

''சொல்லப்பா — யார் அழகு? என் ஜீவாவா—மலர்க்கொடியா?'' என்று மறுபடி, கேட்டான் சதாசிவம்.

''உனக்கு ஜீவா அழகு— எனக்கு மலர்க்கொடி' என்று சமரசமாகக் கூறினான் சங்கரன்.

''எந்த மலர்க்கொடியைப் பற்றிப் பேசுகிறீர்கள்? அந்த நாடகக்காரியின் பெண்ணா'' என்று ஜீவா கேட்டாள்.

''அவள் அழகுதான்; டிராமாகாரிகள்கூட அழகில்லாமல் இருப்பார்களா? அவர்களுடைய பார்டர் சேலையும் — கர்ல் கூந்தலும்— தளுக்கும் குலுக்கும் — எங்களுக்கு எங்கிருந்து வரும்? நாங்கள் பரம்பரையாகப் பார்த்தசாரதி கோயிலுக்கு 'முத்திரை'; ஏதோ 'ராமா— கோவிந்தா—கிருஷ்ணா' என்று காலங்கழிப்பது'' என்று

(தொடர்ச்சி 22ம் பக்கம்)




வடபுலம் வாழ்ந்த நாடாளு மன்றில்
திடமுறும் மாறுடைக் கருத்தினர் திகைக்கத்
தங்கருத் ததனைத் தயங்குறு வண்ணம
சிங்கக் கர்ச்சனை செய்தவர்! தீந்தமிழ்
நாட்டுக் குயர்வு நல்கிய தீரர்!
மீட்டுப் புகழைத் தந்தநல் வீரர்!
பாட்டிசை மொழியால் பரந்தஇவ் வுலகின்
நாட்டங் கவர்ந்த நல்லறி வாளர்!
செய்திடும் செயலினால் சீர்த்தமிழ் வாழ்வினுக்
குய்வகை தேடிய உயர்நெறி யாளர்!
பகைக்குணங் கொண்டு படுத்திட எண்ணுவோர்
நகைக்கிடமாகி நடைப்பிண மாகிடப்,
நகைக்கிடமாகி நடப்பிணமாகிடப்,
பொறுமை அன்பெனும் போர்ப்படை யதனால்
திறத்துடன் செயல்படும் சிந்தனை யாளர்!
தூங்கிய தமிழரின் தூக்கங் கலைத்தவர்!
ஏங்கிய நிலையினை இல்லா தொழித்தவர்!
தண்டமிழ்க் குற்ற தளையினை அறுத்தவர்!
மண்புகழ் வாழ்வை மலர்ந்திடச் செய்தவர்!
'சொலல்வலன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெலல் யார்க்கும் அரிது'என இசைத்த
உலகம் போற்றும் உயர்வள் ளுவனார்
இலகும் கருத்துக் கிலக்கிய மாக
விளங்கிய அவரே அண்ணா!
வளம்பெறும் அவர்பெயர் வாழிநீ டூழியே!

—கவிஞர் சிவப்பிரகாசம்

# உன் பாதையில் நாங்கள் பயணிகள்!

கவிஞர் மணிமொழி



நூல்வழியே தோன்றிவரும்
அறிவு! மலையின்
நுனியிருந்து பிறந்துவரும்
அருவி! காதல்
வேல்விழியின் புணர்ச்சியினால்
வருவதுண்டு!
வீணைவழி யே கீதம்
எழுவதுண்டு
பால்வழியில் பண்புகளும்
அமையு மென்பார்
பரந்திருக்கும் வான்வெளியின்
கோள்க ளெல்லாம்
'பால்வழி'யில் சுழன்றோடும்
அண்ணா! உன்தன்
பாதையிலே பயணங்கள்
செய்வோர் நாங்கள்!

எங்களுக்கு விழி நீங்கள்!
என்றென் றைக்கும்
எங்களுக்கு ஒளி நீங்கள்!
கால காலம்
எங்களுக்கு மொழி நீங்கள்!
மொழி உதிர்க்கும்
இதழ்நீங்கள் நாநீங்கள்
உணர்வு நீங்கள்!

திங்களது செழும்பரிதி
ஒளியை யுண்டு
சீதளத்தைப் பொழிகிறது
அதுபோலிங்கே
உங்களது அறிவொளியே
பட்டுப்பட்டு
உதவாத கற்களெலாம்
வைர மானோம்!

நீங்களிங்கே பிறவாமல்
இருந்திருந்தால்
நித்திரையின் தாலாட்டில்
இருந்திருப்போம்
நீங்களிங்கே உலவாமல்
இருந்திருந்தால்
நிகழ்ச்சிநிரல் இல்லாமல்
கிடந்திருப்போம்!
நீங்கள்மட்டும் வாய்திறவ
திருந்திருந்தால்
நிச்சயமாய் ஊமைகளாய்
அமர்ந்திருப்போம்
நீங்கள்வந்த பின்னால்தான்
எங்களுக்கே
நெடுமூச்சும் உயிர்ப்புணர்வு
வந்த ... ா!

---

# எழிலோவியம் இறவாச் சரித்திரம்!

கவிஞர் தனசேகரன்

எளிமை அடக்கம் எங்களின் அண்ணா
ஏற்ற பொறுமையில் இருநிலம் அண்ணா!
தெளிவு திறமைக்கு உறைவிடம் அண்ணா
தீந்தமிழ்ப் பண்பின் நிறைகுடம் அண்ணா
குளிர்ந்த கருணைக் கொண்டலாம் அண்ணா
குழந்தை இதயம் கொண்டவர் அண்ணா
ஒளிரும் பகுத்தறி வுப்பரிதி அண்ணா
உரிமைப் போர்முர சார்த்தவர் அண்ணா!

பார்வைக்கு எளியவர் பார்புகழ் அண்ணா
பண்பில் அறிவில் உயர்ந்தவர் அண்ணா
பேரறிவாளர் பெருந்தகை அண்ணா
பிறர்க்கென வாழ்ந்த பண்பாளர் அண்ணா
சீர்திருத் தச்சிற்பி சமுதாய உழவன்
செயற்கரிய செய்த செம்மலாம் அண்ணா
காரிருள் நடுவில் கதிரவன் அண்ணா
கன்னித் தமிழ்நலக் காவலர் அண்ணா!


குடும்ப பாசத் தலைமகன் அண்ணா!
கொள்கை வைரக் குன்றமாம் அண்ணா
கடமை கண்ணியம் கட்டுப் பாட்டினில்
கடுகள வும்பிற ழாதவர் அண்ணா
உடும்பெனக் கொள்கைப் பிடிப்புடையோரை
உடன்பிறப் பாகக் கொண்டவர் அண்ணா
இடும்பைப் புயலில் சோதனைச் சுழலில்
இலட்சியப் பயணம் தொடர்ந்தவர் அண்ணா!

பேச்சில் எழுத்தில் முக்கனிச் சாற்றைப்
பிழிந்து கொடுத்தவர் எங்கள் அண்ணா
மூச்சில் உயிரில் உணர்வில் வைத்து
முத்தமிழ் காத்த வித்தகர் அண்ணா
வாய்ச்சொல் வீரர்கள் சிலர்போல் சோதனை
வந்திடத் துவண்டு ஓடாமல் நின்று
தீச்சுட் டாலும் சுடரும் பொன்போல்
திகழ்ந்தவர் குன்றுப் புகழ்மலை அண்ணா!

வெய்யில் இடையினில் தண்ணிழல் அண்ணா
வீழ்ந்தோர் கையில் ஊன்றுகோல் அண்ணா
பொய்யில் புரளும் புழுக்களைச் சுட்டுப்
பொசுக்கிடும் செங்கதிர் எங்களின் அண்ணா
கையில் தடியூன்றி அறிவுப் புதுவழி
காட்டிய தந்தை பெரியாரின் பள்ளியில்
ஐயந் திரிபறக் கற்றவர் எங்கள்
ஆசான் அண்ணல் அறிஞர் அண்ணா!

எழிலோ வியமாய் ஏழைகள் நெஞ்சில்
என்றும் இருப்பவர் எங்கள் அண்ணா
விழியாய் ஒளியாய் தமிழ்ச்சமு தாயத்தின்
வேராய் உயிராய் இருப்பவர் அண்ணா!
இழிவு துடைத்துத் தன்மானம் காத்த
இறவாச் சரித்திர நாயகன் அண்ணா
தலைவர்கள் பலரைத் தந்தவர் அண்ணா
தமிழ்ச்சமு தாயத்தின் விடிவெள்ளி அண்ணா!





## உற்ற நண்பன்

மொழியைக் கருவி என்று நினைக்காமல் தங்களை வழிநடத்தும் துணைவன், வழி காட்டும் தலைவன, பாடம் போதிக்கும் ஆசான், உள்ளத்து உணர்ச்சிகளை வெளியிடும் நண்பன் என்றுநினைக்கவேண்டும்.

அறிஞர் அண்ணா

புகைப்படங்கள் :
சாமுவேல்

மந்தகாசப் புன்னகை தவழ அண்ணியாரிடம் கேலியாக ஏதாவது பேசிக் கொண்டிருப்பது அண்ணாவுக்கு ஒரு பொழுதுபோக்கு.



## அரசாங்கம்

அரசாங்கம் என்பது வீடு. ஆளும்கட்சி அதைவாடகைக்கு எடுத்துக்கொள்கிறது. மக்களின் நல்ல எண்ணம்தான் வாடகை பணம். ஜனநாயக உணர்வு அதை ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை கணக்குப் பார்க்கிறது.

அறிஞர் அண்ணா

கறுப்புக் கண்ணாடி போட்டுக்கொண்டு ஒரு படமெடுக்கச் சொல்லி விருப்பம் தெரிவித்தார் அண்ணா. கண்ணாடி அன்பில் அவர்களுடையது.

# அண்ணாவைப் புரிந்து கொள்வோம்

ஈ. வே. ரா. மணியம்மை

அண்ணா என்ற சொல் இன்றைய தினம் தமிழர் உள்ளங்களில் எல்லாம் இல்லங்களில் எல்லாம் நிறைந்திருக்கிறது.

பாசத்தோடு கூடிய குடும்ப உணர்ச்சியோடு வளர்த்த இயக்கம் சுயமரியாதை இயக்கம். அந்தக் குடும்பத்தில் தந்தையாக நமது அறிவு ஆசான் தந்தை பெரியார் அவர்களும், தலை மகனாக அறிஞர் அண்ணா அவர்களும் விளங்கி வந்தார்கள்.

அண்ணா அவர்களை 1938-ம் ஆண்டிலிருந்தே நானறிவேன். அவரது கூட்டப் பேச்சுக்களை கேட்க வேலூரிலிருந்தே என் தந்தையாருடன் வந்திருக்கிறேன். காஞ்சிபுரம் உயர் திரு. பொன்னப்பா அவர்களும், அண்ணா அவர்களும் அப்பொழுதெல்லாம் வேலூர் பகுதிகளில் கூட்டத்திற்கு வரும்பொழுதெல்லாம் எங்கள் இல்லத்திற்கு வருவார்கள்.

•

அதற்குப் பின் ஈரோட்டில் "குடி அரசு" அலுவலகத்தில் பணியாற்றிய காலத்திலும் அவரை அறிவேன்.

அண்ணா அவர்கட்கும் இயக்கத்தில் இருந்த மற்ற முன்னணித் தோழர்கட்கும் இடையே மிகுந்த வேறுபாடு உண்டு.

எப்பொழுதுமே அடக்க சுபாவத்துடனும் தான் உண்டு — தன் பணி உண்டு என்கிற அளவில் தன்னை உட்படுத்திக்கொள்வார்.

அதுவும் தந்தை பெரியார் அவர்களிடத்தில் அவர் நடந்து கொண்ட பாங்கு; நம்மை பழைய குரு-சிஷ்ய உலகிற்கு அழைத்துச்செல்லும்.

ஒரு உண்மையான சீடன் தனது குருநாதரிடம் எப்படி நடந்துகொள்வாரோ அது போலவே அவர் நடந்து கொள்வார். தந்தை பெரியார் அவர்களைச் சந்திப்பதைக் கூடுமானவரை தவிர்ப்பார். அதற்கு அடிப்படைக் காரணம் தனது தலைவரிடம் அவர் கொண்டிருந்த மரியாதையும் அந்த மரியாதை அடிப்படையில் ஏற்பட்ட அச்சமும்தான்!

அந்த அச்சமும் மரியாதையும் அவர் ஆட்சிப் பொறுப்பேற்று முதல்வராக ஆன பின்பும் கூட அவரை விட்டு விலகவில்லை.

அண்ணா அவர்கள் தமிழக முதல்வர் பொறுப்பேற்ற பின்பு ஒருமுறை நாகரசம் பட்டிக்கு வந்திருந்தார். அவ்வூர் பொதுமக்களின் நன்கொடையால் உருவாக்கப்பட்டிருந்த பெரியார் இராமசாமி உயர்நிலைப் பள்ளி கட்டிடத் திறப்பு விழாவிற்கு வந்திருந்தார். விழா முடிந்தவுடன் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அய்யா அவர்கட்குப் பக்கத்தில் அண்ணா அவர்கள் உட்கார ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அய்யா அவர்களும், மற்றும் அனைவரும் அமர்ந்து விட்டார்கள். தந்தை பெரியாருக்குப் பக்கத்தில் அவர் அண்ணாவைத் தேடுகிறார்கள். அண்ணாவைக் காணவில்லை. அய்யாவின் பக்கத்தில் அமர்ந்து உண்ணக் கூச்சப்பட்டுக் கொண்டு, கூட்டத்தோடு கூட்டத்தில் போய் உட்கார்ந்து கொண்டார்.

'குடி அரசு' அலுவலகத்தில் தன் தலைவரிடம் கொண்ட அந்த அச்சமும் மரியாதையும் அவர் கோலோச்சும் முதல்வராக ஆன பின்பும் கூட அவரிடமிருந்து விடுபடவில்லை.



'குடி அரசு' அலுவலகத்தில் தனது தலைவரிடம் கொண்ட அந்த மரியாதை சிறிதுகூட மாறவில்லை என்பது போலவே 'குடி அரசு' அலுவலகத்தில் அவரது இதயத்தில் குடிகொண்ட அந்தச் சுயமரியாதைப் பகுத்தறிவுக் கொள்கையும் கூட கடைசி வரை அவரது இரத்தத்தோடு இரத்தமாகவே கலந்திருந்தது.

ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் தனது அறிவு ஆசானுக்கு அவர் அளித்த முதல் 'காணிக்கை' சுயமரியாதைத் திருமணத்தைச் சட்டப்படி செல்லுபடியாக்கியதாகும்.

அதுமட்டுமல்ல — சுயமரியாதை இயக்கம் பகுத்தறிவுக் கொள்கைகள் அவரது இதயத்திலே நீறு பூத்த நெருப்பாகக் கனிந்து இருந்தது என்பதை, நாகரசம் பட்டியிலே பெரியார் இராமசாமி உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத் திறப்பு விழாவிலே அவர் பேசிய பேச்சே எடுத்துக் காட்டியது.

பல்லாண்டுக்காலம் அரசியல் துறையில் அவர் சிக்கி இருந்தாலும் அவர் உள்ளத்தில் மய்யமிட்டிருந்த அந்தக் கருப் பொருளை அவர் அன்றைய தினம் வெளிப்படுத்திவிட்டார் என்றே கூறவேண்டும். "நான் அரசியலில் இருந்து கொண்டு இப்பொழுது ஆற்றுகின்ற பணியைத் தொடர்ந்து செய்யவா — அல்லது ஆரம்ப காலத்தில் நான் செய்து வந்த அந்தப் பகுத்தறிவுப் பிரச்சார பணியைத் தந்தை பெரியார் அவர்களோடு தொடர்ந்து செய்யவா என்பதைத் தந்தை பெரியார் அவர்கள் இந்த மேடையிலே முடிவு சொல்லட்டும். அதன்படி செயல்படக் காத்திருக்கிறேன் — என்றார்கள்.

அண்ணா அவர்களின் இதயத்தில் ஆழமாகக் குடிகொண்டிருந்த அடிப்படை உணர்வை அப்படியே படம் எடுத்துக் காட்டிய நிகழ்ச்சியாகும் இது.

அண்ணா என்றால் — அதுவும் அறிஞர் அண்ணா என்றால் ஒவ்வொருவருக்கும் நினைவில் வரவேண்டிய நிகழ்ச்சிகள் பல உண்டு.

கம்ப ராமாயணத்தினைப் பற்றியவாதத்தில் சொல்லின் செல்வர் இரா. பி. சேதுப் பிள்ளை அவர்களையும், டாக்டர் நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களையும் வெற்றி கொண்டாரே — அந்த நிகழ்ச்சியும் காட்சியும் நம் கண் முன் வரவேண்டும்.

ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தபோதுங்கூட, அரசு அலுவலகங்களில் உள்ள கடவுள் படங்களை நீக்கவேண்டும் என்று உத்திரவுப் போட்டாரே அந்த அண்ணாவின் உணர்வை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

"தியாகி மானியம் பெரியாருக்கு அளிக்கப்படுமா?" என்று எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் கேட்ட கேள்வி ஒன்றுக்கு, முதல்வர் அண்ணா அவர்கள் 'இந்த ஆட்சியே தந்தை பெரியாருக்குக் காணிக்கையாக்கப் பட்டதுதான் என்றாரே அதில் அடங்கியுள்ள ஆழத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

அறிஞர் அண்ணா என்ற சொற்களில் அடங்கி இருக்கும் இந்த உட் பொருள்களைப் புரிந்துகொள்ளாமல் வெறும் அண்ணா புகழ் பாடிக் கொண்டிருப்போமேயானால், நாம் அண்ணா அவர்களைச் சரியாகப் புரிந்து கொண்டவர்களாக ஆகமாட்டோம்!

புத்தருக்கு ஒரு அசோகன் கிடைத்ததுபோற, தந்தை பெரியார் அவர்கட்குக் கிடைத்த அசோகனே அறிஞர் அண்ணா அவர்கள்.


அந்த பகுத்தறிவு இயக்க— சுயமரியாதை இயக்க அண்ணாவை பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள் மறைக்கப் பார்க்கிறார்கள். இந்த இடத்தில் நாம் விழிப்புடன் இருந்து காரியம் ஆற்றவேண்டும்.


அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிக் குவித்த கடவுள், மத புராண இதிகாச எதிர்ப்பு நூல்களை எல்லாம் மலிவுப் பதிப்பாக, மக்கள் மன்றத்தில் கொண்டு வரவேண்டும். அதற்கான ஒரு திட்டத்தோடு செயல்கள் துவக்கப்படவேண்டும்.

ஏன் எனில் இன்றைய இளைஞர் உலகம் அண்ணா அவர்களைப் புரிந்துகொண்டிருக்கும் விதம் சரியான அடிப்படையல்ல! அவர்களைப் புரிய வைக்கவேண்டியது நமது கடமை. அப்படி அண்ணாவைப் புரிய வைப்பதன் மூலம் நாட்டுக்குக் கிடைக்கும் லாபம் ஏராளம்!

அண்ணா அவர்களின் 68-வது ஆண்டு பிறந்த நாளில் இந்தச் சிந்தனையை நாம் கொள்வோமாக!

வாழ்க அண்ணா!





(18-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜீவா தன் பெருமையைப் பேசினாள்.

''கேள் ஜீவு– கதையை; அந்த கூத்தாடிச் சிறுக்கியை கலியாணம் செய்துகொள்ள வேண்டுமாம் இவர்; நான் மட்டும் இல்லாவிட்டால் அந்த மங்கா மெதுவாக என் நண்பனை மாட்ட வைத்து விட்டிருப்பாள்; ஆசாமி, தலைகால் தெரியாமல் ஆடினார்'' என்றான் சதாசிவம்.

''இதேது தொல்லையாகப் போச்சு; நான்தான் விட்டு விட்டேனே அந்த எண்ணத்தை என்று கூறினான் சங்கர்.

''அது இல்லை; என்ன அவள் அவ்வளவு அழகு? அவளைக் கண்டு இவர் எப்படிச் சிக்கிக் கொண்டார்? இவரைப் பார்த்தால் ராஜா போல இருக்கிறாரே? அவள் என்ன — ஏதோ சிவப்புத் தோலும், நாரும் நரம்புமாக இருக்கிறாள் — அவ்வளவு அழகா அவள்?'' என்று ஜீவா சங்கரனைக் கேட்டாள்.

''என் கண்களுக்கு..'' என்று இழுத்தாற்போல் பதில் சொன்னான் சங்கரன்.

''ராஜா மெச்சினது ரம்பை'' என்றாள் ஜீவா.

பேச்சு வளர்ந்தது: கடைசியிலே ஜீவா மலர்க்கொடியைப் பற்றிச் சொல்லாத சொட்டு இல்லை — 'அவள் கண் திருட்டுக் கண்; கை கால்கள் நோயாளிக்கு இருப்பதைப் போல இருக்கிறது; தலை மயிர் ஆயிரத் தெட்டுக் கோணல்; ரொம்ப கர்வம்; நடப்பது — அசல் டிராமா நடை; சிரிப்பு — வெறும் சூது'' என்று ஜீவா அடுக்கடுக்காக அடுக்கினாள். சங்கரன் அவ்வளவையும் கேட்டுக்கொண்டே இருந்தான்.

ஒரு வாரத்துக்கு முன்பு மட்டும் — வேறு யாரேனும் மலர்க்கொடியைப்பற்றி ஜீவா சொன்னதைப் போல் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் — சங்கரன் துள்ளியிருப்பான். இப்போது அப்படியில்லை?

முன்பு மலர்க்கொடி காதலி — இப்போது டிராமாக்காரி; எனவே, தன் எதிரிலேயே அவள் இழிவாகப் பேசப்படுவதைக் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டும் — இடையிடையே சிரித்துக் கொண்டும் இருந்தான் சங்கரன்.

[7]

அன்று ஆரம்பமான பொழுது போக்கு அன்றோடு நின்றுவிடவில்லை; ஜீவா வீட்டுக்குத் தினமும் இரு தோழரும் போகத் தொடங்கினர்; அங்குதான் மாலை வேளைகளிலே 'டீ'; பல நாட்கள் அங்கு விருந்து!

மேலும் கொஞ்ச நாட்களுக்குப் பிறகு, 'சதாசிவம் வராவிட்டாலும் சங்கரன் போவது' என்ற முறை வளர்ந்து — முடிவிலே, ஜீவாவவேசங்கரனின் வைப்பாட்டியாகவும் — சதாசிவம் சங்கரனின் விரோதியுமாகி விட்டான்.

பரீட்சையில் சங்கரன் தோற்றான்.

சதாசிவம் ஊர் முழுவதும் சங்கரன் மீது பழி தூற்றத் தொடங்கிவிட்டான்; எங்கு பார்த்தாலும் சங்கரன் பேச்சுதான்.

'இப்படியா இந்தப் பிள்ளை கெட்டுவிட வேண்டும்? ஐயோ பாபம் — ஏதோ படித்தான்; கடைசியில் ஜீவா வீட்டிலேயே குடிபுகுந்து விட்டானுமே'' என்று ஊரார் பேசிக்கொண்டனர்.

மலர்க்கொடிக்கும் இந்தச் சேதி எட்டிற்று; மனம் மிக வருந்தினாள்; தன் காதலனுக்கு நேரிட்ட கதியை எண்ணி ஏங்கினாள்!

மலர்க்கொடியின் மனம் புண்ணாகி விட்டதைத் தெரிந்துகொண்ட மங்கம்மாள், 'சில காலம் இந்தியாவை விட்டு வெளிநாடு சென்று வருவது' என்று தீர்மானித்தாள்; சிலோனுக்குப் போக ஏற்பாடு செய்துவிட்டாள்.

''புறப்படுவதற்கு முன், எப்படியாவது சங்கரனைக் கண்டு பேசிவிட்டுப் போக வேண்டும்'' என்ற எண்ணம் மலர்க்கொடிக்கு!

ஜீவா வீட்டுக்கு ஆள் அனுப்பினர்; சங்கரன், 'ஆகட்டும் — நாளைக்கு வந்து பார்க்கிறேன்' என்று கூறி முடிப்பதற்குள், 'அவர் அங்கே வரமாட்டார்; ஏன் அந்தச் சிறுக்கி இங்கு வருவதுதானே; வந்தால், அவள் கௌரவம் குறைந்து விடுமா என்ன? என்றாள் ஜீவா.

வந்த வேலையாளுக்கு, சங்கரன் ஒரு காலத்தில் மலர்க்கொடியிடம் எவ்வளவு அன்பு வைத்திருந்தான் என்பது தெரியும்; எனவே, அவன், 'ஜீவாவின் துடுக்கான பேச்சுக்கு சங்கரன் என்ன பதில் கூறுவானோ' என்று எதிர்பார்த்தபடி இருந்தான்.

ஜீவா தயாரித்த கிராமபோன் பிளேட்டை, சங்கரன் பாடினான் — 'ஆமாம் அவ்வளவு அக்கறை இருந்தால் அவளை இங்கு வரச் சொல்லு' என்று கூறினான்.

[8]

மலர்க்கொடியும் — மங்கம்மாவும் சிலோனுக்குச் சென்று பல மாதங்களாகி விட்டன.

சங்கரன் அவர்களை மறந்தும் விட்டான்; ஜீவாவிடம் ஜீவனைக் கொடுத்ததுடன் நிற்காது, மேலும் பல தொல்லைகளைத் தானாக வரவழைத்துக் கொண்டான்; பெண்களிடம் அவனுக்கு அதுவரை இருந்த கூச்சம் பறந்துவிட்டது; ஜீவாவுக்குத் தெரிந்த பெண்களிடம் எல்லாம் வெகு தாராளமாக பழகத் தொடங்கினான்; அது ஜீவாவுக்குக் கொஞ்சம் சங்கடம்தான்; 'தாசி' என்றபோதிலும், அவள் ஒரு பெண்ணல்லவா, அதிலும், இவன் மீது அவளுக்குக் கொஞ்சம் ஆசையும் கூட!

சொத்து போய் —பரீட்சை போய் .. வேலையின்றிக் கிடந்த சங்கரனின் வீண் அதிகாரத்தைக் கூட ஜீவா பொறுத்துக்கொண்டுதான் இருந்தாள்.

''இன்னும் ஒரு மாதத்தில் வேலை வரப்போகிறது; அதுவரையில் பல்லைக் கடித்துக் கொண்டிருக்க வேண்டியதுதான்; என்ன செய்வது ஜீவா; உன்னாலே நான் கெட்டேன் — என்னாலே நீ கெட்டாய்' என்பான் சங்கரன்.

''எனக்கென்னவோ உங்கள் போக்கே பிடிக்கவில்லை; நல்ல குடும்பத்தில் பிறந்து— செல்லமாய் வளர்ந்து — படித்து — கடைசியில் இப்படிக் கெட்டுவிட்டீர்கள்; என்னமோ — என் மீது ஆசை வைத்துவிட்டீர்கள்; அதோடு நின்றீர்களா? ஏதோ வேலை பார்த்துச் சம்பாதித்து எனக்குக் கொடுத்து — நல்ல குடியும் குடித்தனமுமாக இருக்கக் கூடாதா? போன மாதத்திலே 'செயின்' — மார்வாடி கடைக்குப் போச்சு; இந்த மாதத்திலே இந்த வளையல் போகப் போகிறது'' என்று அழுதபடி சொன்னாள் ஜீவா.

''அழாதே ஜீவு; நான் நிச்சயம் அந்த நகைகளையெல்லாம் மீட்டுக் கொடுக்கிறேன்; அடுத்த மாதம் வேலை நிச்சயம் கிடைக்குமாம்; எதிர் வீட்டிலே இருக்கிறாரே எதிராஜ நாயுடு — அவர் சொன்னார்'' என்றான் சங்கரன்.

[9]

மறுநாள் ஜீவா, எதிர் வீட்டு எதிராஜ நாயுடுவை அழைத்துக் கேட்டாள்; அவர் ஒரு சீமைச் சாராயக் கம்பெனியில் வேலைபார்த்துக் கொடுப்பதாகச் சொன்னார்.

ஜீவா தனது கஷ்டங்களை அவரிடம் கூறி, 'எனக்கு அவரை விட்டால் கதி இல்லை; அவரும், உற்றார் உறவினரை எல்லாம் விட்டு விட்டு என்னிடமே வந்து விட்டார்; ஏதோ — நீங்கள் இந்த உதவி செய்தால் மெத்த புண்ணியம் உண்டு' என்று வேண்டிக் கொண்டாள்.

'ஆகட்டும்' என்று கூறி விட்டுப் போனார் அவர்.

எதிராஜ நாயுடுவை ஜீவா கூப்பிட்டுப் பேசிய செய்தி சங்கரனுக்குத் தெரிந்தது; அவ்வளவுதான் —அவனுக்குக் கோபம் பொங்கிவிட்டது; குதித்தான் — கோபித்தான்; 'காட்டி விட்டாயே—சாதிப் புத்தியை' என்றான்.

''ஏண்டி ஜீவு — மெள்ள எதிர் வீட்டு நாயுடுவை இழுக்கப் பார்க்கிறாயோ — ஜாக்கிரதை; அப்படி ஏதாவது நடந்தால் கொலை நடக்கும் இங்கே'' என்று கூறினான் சங்கரன்.

''உனக்காகத்தானே நான் அவரைக் கூப்பிட்டுப் பேசினேன்'' என்று வாதாடினாள் ஜீவா.

''தெரியும் உன் சால் ஜாப்பு; எனக்காக வாதாடுறாம்; புது மாப்பிள்ளை தேடுகிறாயோ?''

''இதென்ன சனியனாப் போச்சு; நான் ஏன் தேடுகிறேன்?''

''நீலி — அப்படியே உருகுகிறாள்; என்னைக் கெடுத்தது மன்றி..''

''யார், யாரைக் கெடுத்தது? ஏன் சும்மா பேசுகிறீர்கள்? உன்னாலேதான், ஊரார் சொன்ன சொல்லையும் கேளாது — மேலே இருந்த நகைகளையும் விற்று உன் இழவுக்குப் போட்டேன்.''

''ராஸ்கல் என்னடி ஏதேதோ பேசுகிறாய் — உதைப்பேன்''

''சும்மா நிறுத்து! உதைக்க மாட்டீர்களா, என்ன?''

பேச்சு முற்றியது; சங்கரன் ஜீவாவை அடிக்கலானான்; அவள், 'ஐயோ' என அலறினாள்; தெருவில் போவோர் — வருவோர் நின்றனர்; கும்பல் கூடிவிட்டது; அக்கம் பக்கத்து வீட்டார் வந்து சமாதானம் சொன்னார்கள்.

அன்றுதான் ஒரு விஷயம் விளங்கிற்று, ஜீவாவுக்கு; அதாவது, 'சங்கரன் குடிக்கிறான்' என்பது!

[10]

கெடுவதற்குத் தொடங்கி விட்டால் அதற்கு ஓர் எல்லையுண்டோ? ஜீவாவின் மனம் கொதிக்கும்படியும் சங்கரன் நடந்துகொள்ள ஆரம்பித்தான்.

நாயுடு, சொன்னபடி வேலைபார்த்துக் கொடுத்தார்; வந்த சம்பளத்திலே பாதி — சாராயக் கடைக்குச் சென்றது; பாதி — பார்வதி வீட்டுக்குப் போயிற்று!

பார்வதி, ஜீவாவுக்குத் தெரிந்தவள்; எவ்வளவோ வற்புறுத்திக் கூறினாள் — சங்கரனைத் தன் வீட்டுக்கு வரவேண்டாம்என்று; கேட்கவில்லை சங்கரன்; உருட்டி மிரட்டி அவளையும் சிநேகம் பிடித்துக் கொண்டான்.

ஜீவா அந்தச் சமயத்தில் கர்ப்பம்; குழந்தை பிறந்து— இரண்டொரு மாதம் ஆவதற்குள் சங்கரனை வேலையினின்றும் நீக்கிவிட்டார்கள்; அது மட்டுமல்ல — 'கணக்கிலே தகராறு' என வழக்கு வேறு தொடுத்துவிட்டார்கள்!

போலீசார் அவனைத் தேடிக் கொண்டிருக்கும் நேரத்தில் ஜீவாவுக்குக் கடுமையான காய்ச்சல்; வீடு சோதனை போடப்பட்டது; 'சங்கரனை ஒளித்து வைத்துக் கொண்டு ஜீவா போலீசை ஏய்க்கிறாள்' என எண்ணிப் போலீசார் அவளைக் கண்டித்துப் பேசினார்கள் — தூற்றினார்கள்.

இவ்வளவு தொல்லைகளுக்கிடையே வறுமை அவளை வாட்டிவிட்டது; சங்கரனோ, ஊரைவிட்டு ஓடிவிட்டான்; காய்ச்சலோ குறையவில்லை; குழந்தையோ கோடி சூரியப் பிரகாசமாய் இருந்தது: 'குழந்தையை பிரிந்து விடுவோமோ' என்று எண்ணிப் புலம்பினாள் ஜீவா!

காய்ச்சல் தீருவதற்கு மருத்துவம் செய்துகொள்ள — மிச்சம் மீதி இருந்த சொத்தும் போய்விட்டது! கடைசியில், 'பிழைப்பது கஷ்டம்' என்று டாக்டர்கள் கூறிவிட்டார்கள்; ஜீவாவுக்கு என்னசெய்வதென்றே தெரியவில்லை.

பார்வதிக்கு ஆள் விடுத்தாள்; பார்வதி வந்ததும் குழந்தையை அவளிடம் ஒப்படைத்தாள், இரண்டொரு நாளிலே, ஜீவா இறந்தாள் — பாபம்!

[11]

இதனையெல்லாம் கேள்விப்பட்ட சங்கரன் உள்ளபடியே வருத்தப்பட்டான்; ஆனால், தலையை வெளியே காட்டுவதற்கில்லை. கிராமத்திலே தனது மாமன் வீட்டில் ஒளிந்து கொண்டு, வழக்கை சமரசத்துக்குக் கொண்டுவர முயற்சித்தான்; அது முடிந்தால்தான் அவன் வெளியே வரமுடியும்.

சங்கரனின் மாமன், ரிடையர்டு பென்ஷனர்; அவர் வழக்கை ஒரு சமரச முடிவுக்குக் கொண்டுவந்தார்; கம்பெனிக்காரருக்குப் பணம்

தொடர்ச்சி 23ம் பக்கம்



# வீரன் - வீணன்!

தம்பி! காட்டிலே வேட்டையாடி, கொன்ற புலியின் தோலினைக் காட்டி மகிழ்பவன் தான் வீரன் என்று உலகு ஏற்குமே தவிர, காரக் கருவாட்டைப் பக்குவமாக வைத்து பொறியில் விழச் செய்து, நான் கொன்ற எலியின் வால் காணீர் என்று கூறு பவனையா. உலகு மதிக்கும்?

புலித் தோலுக்கும் எலி வாலுக்கும் உள்ள வேற்றுமை ஒரு வீரனுக்கும் ஒரு வீணனுக்கும் உள்ள வேறுபாட்டினையன்றோ விளக்குகிறது.

-அண்ணா

தம்பிக்கு கடிதம் (19-2-56)

(22-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்து வழக்கைப் பைசல் செய்துவிட்டார்.

சங்கரன், 'இந்தப் பூனேயும் பால் குடிக்குமா' என்றபடி மாமன் வீட்டிலேயே இருந்து வந்தான்.

''இனியாவது புத்தியாகப் பிழை; எனக்கும் வேறே பிள்ளேகுட்டி கிடையாது; என் சொத்து உனக்குத்தான் சொந்தம்'' என்று கூறினர் மாமன்.

சங்கரனுக்கும் கொஞ்சம் கொஞ்சமாகப் புத்தி வந்தது; மாதத்திற்கு ஒருமுறை பார்வதியின் வீட்டிற்குச் சென்று குழந்தையைப் பார்த்துவிட்டு வருவான்.

சங்கரனின் மாமன், அதற்காக ஒன்றும் குறை சொல்வதில்லே; 'இவ்வளவுக்காவது நல்லபடி திரும்பினனே' என்ற மகிழ்ச்சி அவருக்கு!

[12]

மலர்க்கொடி, சிலோனில் 'நர்சு' வேலேக்குச் சென்றுவிட்டாள்; சங்கரன் தன்னேக் கைவிட்டதால் ஏற்பட்ட மனவேதனே அவளுக்கு மாறவே இல்லே. உயிரைக் கொடுத்து விடுவதாகச் சொன்ன சங்கரனே தன்னேக் கைவிட்டுவிட்டபோது வேறு யாரைத்தான் நம்புவது அவள்?

மலர்க்கொடி, நர்சு வேலேக்காகப் பயிற்சி பெறத் தாயிடம் அனுமதி கேட்டாள்; தாயும்கொடுத்தாள்.

சில ஆண்டுகள் சிலோன் வைத்தியசாலே ஒன்றில் அவள் நர்சாக இருந்தாள்.

இடையே சங்கரன், சென்னேக்கே திரும்பவும் சென்று — ஒரு பிரபல மருந்துக் கம்பெனியில், எழுத்தர் வேலேயில் அமர்ந்தான்; அந்தச் சமயத்தில்தான் அவனுக்கு சிலோன் வைத்தியசாலேயில், மலர்க்கொடிக் நர்சாக இருப்பது தெரிய வந்தது.

ஏதோ சில மருந்துகள் தேவை என்று சிலோன் வைத்தியசாலேக்காக மலர்க்கொடி எழுதிய கடிதம் ஒன்று சங்கரனிடம் சிக்கியது; அதைக் கண்டதும் அவனுக்கு முன்னுள் நினேவுகள் யாவும் ஒன்றன் பின் ஒன்முக வந்தன; தன்னேத் தானே கெடுத்துக் கொண்டதை எண்ணி வருந்தினன்; சிலோன் 'நர்சுதான் —தான் காதலித்த மலர்க்கொடி, என்பதைத் தெரிந்துகொண்டான்.

அவனுக்கு, 'எப்படியேயேனும் மலர்க்கொடியைக் காணவேண்டும்' என்ற எண்ணம் உண்டாயிற்று; சிலோனுக்குச் செல்வதெனத் தீர்மானித்தான்; நேரே தன் மாமன் வீடு வந்தான்; தன் மனதில்' இருந்தவற்றை ஒன்றைக்கூட ஒளிக்காமல் மாமனிடம் கூறினன்.

''நாம் கொங்கு வேளாளக்குடியில் பிறந்து, நாடகக்காரியை மணப்பதா என்று எண்ணியே என் இன்பத்தை விடுத்தேன்'' என்முன் சங்கரன்.

''நாடகக்காரியை மணம் செய்து கொண்டால் நாடு கேலி செய்யும் என்று எண்ணினயே; நடந்த சம்பவங்களேப் பற்றி அவ்விதம் எண்ணினயோ'' என்று கேட்டார் மாமன்.

''அவைகள் வெளிக்கு வராது என்று எண்ணினேன்; அப்படி வரினும் அதைப்பற்றி அவ்வளவு கேவலமாகக் கருதமாட்டார்கள்—கலியாணம் செய்து கொண்டால்தான், 'சாதி கெட்டவன்' என்று எண்ணினேன்; அதுதான் நான் செய்த தவறு'' என்முன் சங்கரன்.

''சிலோனுக்கு நீ போக வேண்டாம்; மலர்க்கொடியும் — மங்கம்மாளும் இங்கு வரும்படி நான் செய்கிறேன்; மலர்க்கொடி வேறு யாரோ என்று எண்ண வேண்டாம்; அவள் என் மகள்தான்; மங்கம்மாளே நான் காதலித்து — நான் அவளோடு வாழ்ந்து வந்தேன்; ஆனல் உன்னேப்போலவே தான் நானும் ஊருக்கு அஞ்சி —விஷயத்தை வெகு இரகசியமாக் வைத்துக்கொண்டிருந்தேன்; மங்கா நாடகத்துறையிலே ஈடுபட்டுவிட்டாள்; நான் அவளே விட்டுப் பிரிந்துவிட்டேன்; ஆனல், எங்களிருவருக்கு மிடையே மனக்கசப்பு ஏதும் கிடையாது; என் பொருட்டு மங்கா, எதையும் தியாகம் செய்யத் தயாராக இருந்தாள்; நான் மணம் செய்துகொள்ள மறுத்தபோதுகூட, மங்காதான் என்னே மணம் செய்துகொள்ளுமாறு வற்புறுத்தினள்; நானும் அவளும் பிரிந்தோம்; அப்போது மலர்க்கொடி ஐந்து வயதுக் குழந்தை; பிறகு அவர்களேப் பற்றி நான் அக்கறை ஏதும் எடுத்துக்கொள்ளவில்லே; நான் 'சிங்களச் சீமாட்டி' என்று எழுதிய நாடகத்திலே எங்கள் இருவரின் காதல் சம்பவத்தையே எழுதியிருந்தேன்; அதனே நடித்து மங்கா பெரும் பெயரெடுத்தாள்'' என்று சங்கரனின் மாமன், தன் சுயசரிதையைச் சொன்ன போது சங்கரன் ஆச்சரியப் பட்டான்.

''ஆனல், மலர்க்கொடிக்கு இந்நேரம் மணம்....'' என்று கேட்டான் சங்கரன்.

'இல்லே—மணமாகவில்லே. நான் அதைப்பற்றி விசாரித்து வைத்துள்ளேன். அது மட்டுமல்ல சங்கரா — உன் விஷயம் முழுவதும் எனக்குத் தெரிந்ததும் மலர்க்கொடிக்கு அவைகளே விளக்கி எழுதிவிட்டேன்; அடுத்த கப்பலில், சிங்களச் சீமாட்டியும் அவளுடைய தங்கப் பதுமையும் வந்து சேருவர்'' என்முர்.

அதைப் போலவே, தாயும் — மகளும் வந்தனர். மலர்க்கொடி ஒரே புன்சிரிப்பால் சங்கரனே மன்னித்துவிட்டாள்.

திருமணம் வெகு எளிய முறையிலேயே நடந்தது.

பார்வதியிடம் வளர்ந்து வந்த குழந்தை குமுதா — சங்கரன் வீட்டில் சேர்ப்பிக்கப்பட்டது.

எல்லாரும் ஒரே குடும்பமாக இருந்தனர்; ஊரார் ஏதோ பேசினர்கள். ஆனல் அந்தக் குடும்பத்தின் ஆனந்தத்தை ஊரார் என்ன அறிவார்கள்? அளவு கடந்த ஆனந்த வாழ்வு வாழ்ந்தனர் அவர்கள்!



# இலட்சியத்தை நோக்கி...

தனக்கென்று ஓர் இலட்சியம் கொண்டோர் எவரும் அதற்கான பணியாற்றுகையிலே, குறுக்குப் பாதைகள் கண்டால் அதிலே நுழைந்து இலட்சியத்தை இழந்து விடச் சம்மதிக்கமாட்டார்கள். இலட்சியத்தை நோக்கிச் செல்வோருக்கு அதற்கான ஆக்கமும் ஊக்கமும் அளிப்போரே தலேவர்கள், நண்பர்கள், வழிகாட்டிகள், ஞானசிரியர்கள், இடையில் இளநீர் கொடுப்போர் நன்றிக்கு உரியோர், இதயம் நோகப் பேசுவோர் பரிதாபத்துக்குரியோர் உடனிருந்து கெடுப்போர் கண்டனத்துக்குரியோர் பாதையில் பயணத்தின் கடுமை தாங்கமாட்டாமல் பட்டுப்போவோர் அனுதாபத்துக்குரியோர்.

-அறிஞர் அண்ணு

(தம்பிக்குக் கடிதம் 1—1—55)

# அறிஞர் அண்ணாவின் நாடகங்கள்....

| நாடகங்கள் | ஆண்டு | இயல்பு |
|---|---|---|
| அவனுசியார் காண வேண்டிய காட்சி | 19- 9-1947 | ஓரங்கம்: அரசியல் |
| அவன் பித்தனா? | 11- 7-1943 | ஓரங்கம்: உண்மை நிகழ்ச்சி |
| இரக்கம் எங்கே? | 1948 | ஓரங்கம்: சமூகம் |
| இரக்கம் ஒரு பயணம் | 17- 8-1947 | ஓரங்கம் சமூகம் |
| இளங்கோவின் சபதம் | 25- 6-1950 | ஓரங்கம்: வரலாறு |
| இன்ப ஒளி | 14- 1-1970 | முழு நாடகம்: கற்பனை |
| இன்ப நாளில் இதயம் பாடுது | 14- 1-1959 | ஓரங்கம்: சமூகம் |
| எதையும் தாங்கும் இதயம் | 1962 | திரை ஓவியம்: சமூகம் |
| எத்தன் திருவிளையாடல் | 9- 7-1950 | ஓரங்கம்: உண்மை நிகழ்ச்சி |
| ஓர் இரவு | 15- 4-1948 | பெருநாடகம்: சமூகம் திரை ஓவியம் |
| கடவுளர் உலகில் | 6- 5-1956 | ஓரங்கம்: எள்ளல் |
| கண்ணாயிரத்தின் உலகம் | 1949 | ஓரங்கம்: சமூகம் |
| கண்ணீர்த்துளி | 1955 | ஓரங்கம்: அரசியல் |
| கல்சுமந்த கசடர் | 1949 | ஓரங்கம்: வரலாறு |
| களத்தில் வென்றான் | 29- 4-1956 | ஓரங்கம்: அரசியல் |
| கறை போகவில்லை | 14- 9-1947 | ஓரங்கம்: புராணம் |
| காசூரார் கருணை | 21-12-1947 | ஓரங்கம்: அரசியல் |
| காதல் ஜோதி | 4- 7-1953 | பெருநாடகம் சமூகம் திரை ஓவியம் |
| சந்திரோதயம் | 23- 4-1943 | பெருநாடகம் சமூகம் |
| சன்மானம் | 21- 8-1955 | ஓரங்கம்: எள்ளல் |
| சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் அல்லது சந்திரமோகன் | 29- 4-1945 | பெருநாடகம்: வரலாறு |
| சுயேச்சையாகிவிடுவேன் | 24- 1-1960 | ஓரங்கம் அரசியல |



| நாடகங்கள் | ஆண்டு | இயல்பு |
|---|---|---|
| செல்லும் இடந்தோறும் | 17- 6-1956 | ஓரங்கம்: அரசியல் |
| செல்லப்பிள்ளை | 21- 4-1948 | ஓரங்கம்: சமூகம் |
| சொர்க்கவாசல் | 14- 1-1955 | பெருநாடகம்: திரை ஓவியம் |
| சோனசலம் | 3- 7-1947 | ஓரங்கம்: எள்ளல் |
| நல்லதம்பி | 14-1-1948 | பெருநாடகம் திரைஓவியம் |
| நன்கொடை | 1951 | ஓரங்கம்: அரசியல் |
| நீதிதேவன் மயக்கம் | 14- 7-1947 | ஓரங்கம்: திறனாய்வு |
| நீதிபதி வக்கிலானர் | 14- 1-1961 | ஓரங்கம்: அரசியல் |
| தங்கத்துளிகள் | 24- 9-1950 | ஓரங்கம்: சமூகம |
| தர்மம் தலைகாக்கும் | 14- 1-1950 | ஓரங்கம்: சமூகம் |
| துரோகி கப்ளான் | 2-12-1945 | ஓரங்கம்: வரலாறு |
| தேவலோகத்தில் | 10- 8-1947 | ஓரங்கம்: கற்பனை |
| பக்தியின் பேரால் | 1- 7-1956 | ஓரங்கம்: உண்மை நிகழ்ச்சி |
| ப்கிரதியின் பந்தயம் | 15- 3-1959 | ஓரங்கம் : கற்பனை |
| பாங்கர் பணம் பெருத்தான் | 19- 2-1950 | ஓரங்கம்: அரசியல் |
| பாங்காங் பங்கஜா | 3- 1-1951 | ஓரங்கம்: எள்ளல் |
| பாரதம் | 14- 8-1960 | ஓரங்கம்: அரசியல |
| பாவையின் பயணம் | 1- 6-1959 | பெருநாடகம் |
| புதிய மடாதிபதி | 1942 | ஓரங்கம்: சமூகம் |
| ர்ாகவாயணம் | 1955 | ஓரங்கம்: எள்ளல் |
| ரோம் எரிகிறது | 25- 7-1943 | ஓரங்கம்: வரலாறு |
| வழக்கு வாபஸ் | 12- 6-1946 | ஓரங்கம்: எள்ளல் |
| விலையேறிவிட்டது | 23- 3-1947 | ஓரங்கம்: அரசியல் |
| வேலைக்காரி | 25- 4-1947 | பெருநாடகம் சமூகம், திரை ஓவியம் |



அஞ்சுகம் பதிப்பகத்திற்காக சென்னை - 600034 'முரசொலி' அச்சகத்தில் அச்சிடப்பட்டு ஆசிரியர் மாறனல் 52 ஏ கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை - 600034 லிருந்து வெளியிடப்படுகிறது.

உறுதிக்கும்
நீடித்த உழைப்பிற்கும்

# செட்டிநாடு சிமெண்ட்

தயாரிப்பாளர்கள் :

## செட்டிநாடு சிமெண்ட் கார்ப்போரேஷன் லிமிடெட்,

6, அரண்மனைக்காரன் தெரு, சென்னை-600 001,

தந்தி: "BEST CEMENT" :: போன்: 21106 / 21935

★

தொழிற்சாலை:

## குமாரராஜா முத்தைய நகர்

புலியூர் (கரூர்), திருச்சி ஜில்லா

தந்தி: "CEMENT" :: போன்: 144

பதிவு எண், எம். 7436 முரசொலி அண்ணா மலர் 1976, 15-9-76-இதழுடன் இணைந்தது

